பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

•

நெருப்பு, மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

•

கிளைகள் :

பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, ராவல்பிண்டி.

•

பிரதம ஏஜெண்டுகள் :

எ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை etc.



நீண்ட

பிரகாசமுள்ள

கூந்தலுக்கு



ஸ்வஸ்திக்

பரிமள காஸ்டராயில்

ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15.

எனக்கு மிகப்பிரியமானது..எப்பொழுதுமே



நேர்த்தியான வாசனை, உயர் ரகம்—இவ்விரண்டு சிறந்த குணங்களால் எல்லோராலும் மிக விரும்பப்படும் அச்வினி மிட்டாய்கள், ஜனங்களிடையே சுயமாகவே நற்பெயர் சம்பாதித்துக் கொண்டாகிவிட்டன. எங்களது தொழிற்சாலையில் நாங்கள் டாப்பிகள், காரமல்கள், ஆஸிட் ட்ராப்புகள், கூடுதல் காரமான பெப்பர்மின்டுகள், முதலிய மிட்டாய் வகையறுக்கள் செய்வதில் ஓய்வொழிவின்றி வேலை செய்து வருகிறோம். எனினும், இம் மிட்டாய்களுக்குள்ள பெரும் கிராக்கியை எங்களால் சமாளிக்க முடிகிறதில்லை. வெகு சீக்கிரம், வெளி ராஜ்யத்திலிருந்து வரவழைத்த, பூராவும் சுயமாகவே இயக்கப்பெற்ற புதிய இயந்திரங்கள் மும்முரமாக வேலை துவக்கி வரும். அப்பொழுது, நீங்கள் அதிசயிக்கும்படியான இன்னுமெத்தனையோ நூதன மிட்டாய்கள், அதிகம் இனிப்புவாய்ந்தவைகள் உங்களுக்குக் கிடைக்கலாகும்

அச்வினி

டாப்பிகள் (Toffees)—காரமல்கள்—அதிகப்படி காரமான பெப்பர்மின்டுகள்—பழவகைகளால் செய்யப்பட்ட பெப்பர்மின்டுகள்-காய் லாஸெஞ்சுகள்—ஜூஜூபுகள்—ஷுகர் கோடேட் பதாம், பிஸ்தாக்கள் — ஆஸிட் ட்ராப்ஸ் (Acid Drops) — ஐஸிங் ஷுகர் (Icing Sugar)

தி மஹாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

ஹமீரா, கபூர்த்தாலா ஸ்டேட்.

பம்பாய், மதராஸ், சுதேசிகளர் மற்றும் தென் இந்தியாவுக்கு ஏஜன்டுகள்:
மெஸர்ஸ், ஜேபக்கர் பிரதர்ஸ் (இந்தியா) லிமிடெட்,
21, லிங்க செட்டித் தெரு : தபால் பெட்டி 21, மதராஸ்.
ஷா துங்கி ரீவராத் பில்டிங், பட்டாஞ்சேசி ரோடு போஸ்டு, த.பெ. 47, கோச்சி

M.A. 4639




இன்று உயர்ந்தது
நாளை இன்னும் சிறந்தது

பயர்ஸ்டோன்

Firestone

கம்-டிப்பிடு

டயர்கள்



F. 6/46



ரீடா

ரீடா கேசவளர்ச்சிக்கான திவ்ய சக்தி வாய்ந்த ஓர் ஆகாரம். இது சிரசை ஆரோக்யமாக வைத்து, வழுக்கை விழுவதைத் தடுத்து, மயிர் உதிர்வதை நிறுத்தி, பால்யத்தில் ஏற்படும் நரையையும் அறவே நிறுத்தி விடுகிறது.

ரீடா கேசத்திற்கு அதன் இயற்கையான சத்துவத்தை மீண்டும் அளித்து, கேசத்திற்குப் பலமளித்து வளர்ச்சி யளிக்கவல்ல பொருள்களை மயிர்க்கால்கள் விரைவில் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஆர்கானிக் ரூபத்தில் சப்ளை செய்து கேச வளர்ச்சியை விருத்தி செய்கிறது.

ரீடா ஆரோக்யமான கேசவளர்ச்சிக்கு இடைஞ்சலாக உள்ள எல்லாவற்றையும் நிறுத்தி விடுகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் ரீடா உபயோகித்து அபார நன்மை யடைந்துள்ளனர். இன்றே ரீடா உபயோகியுங்கள். இந்தியாவில் எங்கும் கிடைக்கும். ஒரு பாட்டில் விலை அணா 15/-

அழகிய கேசத்தை வளர்க்கிறது

ஆந்திர நக்ஷத்திரங்களின் ஒருமுகமான பாராட்டு

கண்ணாம்பா: ரீடா எனக்கு வெகு திருப்தியளித்தது என்பதை குதூகலத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது உண்மையிலேயே சக்தி வாய்ந்தது.

புஷ்பவல்லி: சுமார் ஒரு வருஷ காலமாக என் கேசம் விரைவில் உதிரத் தொடங்கியது. நான் ரீடா உபயோகிக்கத் தொடங்கியது முதல் என் கேசம் உதிரவில்லை. ரீடா என் கேசத்தின் அழகைப் பாதுகாப்பதில் சக்தி வாய்ந்து விளங்குகிறது. ரீடா ஓர் மிகச் சிறந்த கேச டானிக் என்பது என் அபிப்பிராயம்.

சூர்யகுமாரி: ரீடாவுக்கு ஓர் சுகந்த மணமும் இதை உபயோகிப்பவர்களுக்கு குளிர்ச்சியும் அளிக்கிறது. நான் இனி எப்பொழுதும் ரீடா உபயோகிப்பதென்று தீர்மானித்து விட்டேன்.

கிருஷ்ணவேணி: நான் சிறிது காலம் ரீடா உபயோகித்து வந்தேன். இதற்கு சுகந்த மணமும், குளுமையான உணர்ச்சியும் உண்டு. ரீடா ஓர் ஒப்புயர்வற்ற கேச டானிக் என்பதை சிறிதும் தயக்கமின்றிக் கூறுவேன். இது மயிர் உதிர்வதைத் தடுத்து புதிய கேசத்தை வளர்க்கிறது. அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் கேச டானிக்குகளுக்கு ரீடா எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பது என் அபிப்பிராயம்.

ரீடா ஹேர் டானிக்

விடோ கம்பெனி, 16, ஜோன்ஸ் தெரு, மதராஸ்.


கல்கி
பொருளடக்கம்


மலர் 5 } இதழ் 25 }

1946 ஜனவரி 27

{ பார்த்திப௵ தை மீ 14

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.


ஹிந்தி கற்றுக் கொள்ளுங்கள்.
அ ஆ


புதிய மத்திய சட்டசபை.
பலே, நல்ல சவுக்கடி!
இந்தோனேஷியாவில் இந்திய
துருப்புக்களை உபயோகித்தத
சம்பந்தமாகப் புதிய சட்டசபை
ஆரம்பமான அன்றே, இந்திய
சர்க்காருக்குப் பெருந் தோல்வி
கிடைத்திருக்கிறது.

கல்கி

லர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடிப் பாப்பா —பாரதியார் } இதழ் 25

என்ன செய்தி?

நாஜி தினம்

நேதாஜி ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸின்
த தினம் சென்ற 23உ யன்று தேச
தும் கொண்டாடப்பட்டது. பாரத
ச் சரித்திரத்தில் புகழ்பெற்ற அர்ச்
ன், அபிமன்யு, சந்திரகுப்தன், விக்கிர
த்யன், நரசிம்ம வர்மன், பிரிதிவி
ன், சிவாஜி முதலிய வீரர்களின் பரம்
யில் சேர்க்கப்பட வேண்டிய மகா
ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸ். தாய்
டின் விடுதலைக்காகப் பிறநாடுகளின்
பத்தைக் கோருவதும் தவறாகாது
று அவர் கருதி நாட்டை விட்டுச்
றார். மலாயிலும் பர்மாவிலும் இந்
வீரர் படை சேர்த்தார். "டில்லி
!" என்ற கோஷத்துடன் இந்தி
வை நோக்கி வந்தார். அவர் தமது நோக்
ல் வெற்றி பெற்றிருந்தால் இன்று
து கோடி இந்திய மக்களின் முடி
மன்னராகவும் குல தெய்வமாகவும்
கி யிருப்பார். பிரிட்டிஷார், அமெ
முதலியவர்களும் அவருக்கு மரி
த செய்திருப்பார்கள். ஆனால்
தம் நடக்கவில்லை காந்தி மகாத்மா
அஹிம்சா தர்ம மார்க்கத்தின் மூலம்
யா சுதந்திரம் அடைந்து உலகத்
வழி காட்டியாக விளங்க வேண்டு
பது கடவுளுடைய சித்தமோ,
மோ. நாம் அறியோம். எப்படியானு
இந்தியாவின் விடுதலைக்காக ஒரு
பிரயத்தனம் செய்த ஸ்ரீ சுபாஷ்
ரின் ஞாபகத்தைப் பாரத மக்கள்
றன்றைக்கும் கொண்டாடுவார்கள்
தில் ஐயமில்லை.

போது வருமோ?

நேதாஜி தினத்தன்று பம்பாயில்
ஸ் ஜுபர்தஸ்தைப் பற்றிய துயர
ன செய்திகள் வந்திருக்கின்றன.
ானமாகச் சென்ற ஊர்வலங்களைத்
ப் போய், அதன் பயனாகக் கண்ணீர்ப் புகைப் பிரயோகம், தடியடிப் பிரயோகம், துப்பாக்கிப் பிரயோகம் எல்லாம் நடந்திருக்கின்றன. இதை நாம் எழுதும் போது உயிர்ச் சேதத்தைப் பற்றி சரியான விவரங்கள் கிடைக்கவில்லை. தொந்தரவை வேண்டுமென்று விலைக்கு வாங்கிக் கொள்ளாம லிருப்பதற்கு வேண்டிய நல்ல புத்தி அதிகார வர்க்கத்துக்கு எப்போது வருமோ தெரியவில்லை. அதிகாரவர்க்கத்துக்கு அத்தகைய நல்ல புத்தி வருவதற்குள்ளே ஒருவேளை இந்தியாவுக்குச் சுதந்திரமே வந்துவிடலாம் என்று தோன்றுகிறது.

காங்கிரஸுக்கு வருகிறார் !

டாக்டர் அம்பேத்கருடைய கனவு நனவாகி வருகிறது. அவருடைய வெகு காலைய மனோரதம் நிறைவேறக் கூடிய காலம் வந்து கொண்டிருக்கிறது. நேற்று வரை அவருடைய வசவுக்கு இலக்கான காங்கிரஸ் மகாசபையிலே அவரும் சேரப்போகும் அதிசயம் நிகழப்போகிறது. அதுவும் சாதாரண முறையிலா? குல்லாவைக் கையில் எடுத்துக்கொண்டு அடக்க ஒடுக்கமாக அவர் காங்கிரஸில் சேரப் போகும் வைபவத்தை நாம் கண்ணாலே காணப் போகிறோம். இதற்கு அவர் விதித்த நிபந்தனையையும் சபதத்தையும் அஹமதாபாத்வாசிகள் ஒருவாறு நிறைவேற்றி வைத்திருக்கிறார்கள். பாக்கியையும் நிறைவேற்றி, டாக்டர் பீமராவ் ராம்ஜி அம்பேத்கரைக் காங்கிரஸிலே சேர்க்கவேண்டிய மகத்தான பொறுப்பு பம்பாய் மாகாண வாசிகளைச் சேர்ந்ததாகும்.

அஹமதாபாத் நகரவாசிகள் செய்த சேவை என்ன? அம்பேத்கர் செய்த சபதம் என்ன? அந்த ரசமான விஷயத்தையும் முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? சமீபத்திலே மத்திய மாகாணத்திலே நடந்த தேர்தலில், ஹரிஜனங்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்ட ஆறு ஸ்தானங்களையும் காங்கிரஸ்

கைப்பற்றி விட்டது. இதைப் பார்த்ததும் அம்பேத்கருக்கு ஆத்திரம் உண்டாயிற்று. அந்த ஆத்திரத்திலே ஒரு சபதமும் செய்தார்! — அது என்ன சாதாரண, அற்ப சொற்பமான சபதமா? அந்த ஆறு ஸ்தானங்களையும் திரும்பப் பிடிக்கிற வரையில் வைஸ்ராய் நிர்வாக சபையில் தாம் உத்தியோகம் பார்ப்பதில்லை யென்று சபதம் செய்தாரா? அதெல்லாம் இல்லை. "மத்திய மாகாணம் போனால் போகட்டும். பம்பாய் மாகாணம் என்னுடைய கோட்டை. அதையும் காங்கிரஸ் கைப்பற்றி விட்டால், நான் என் குல்லாவைக் கையில் எடுத்துக் கொண்டு காங்கிரஸிடம் சரணமடைகிறேன்" என்று சபதம் செய்தார்.

அவர் அவ்விதம் சொல்லி வாய்மூட வில்லை. அதற்குள்ளாக அவருடைய சபதத்தின் ஒரு பகுதி அதிசயகரமான முறையிலே நிறைவேறி யிருக்கிறது. அவருடைய 'கோட்டை'யின் ஒரு பகுதி தான் தூளாகப் போயிருக்கிறது. அஹமதாபாத் ஹரிஜனத் தொகுதியிலே நின்ற ஒரு காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து, அம்பேத்கர் கோஷ்டிக் காரர்கள் நான்கு பேர் நின்றார்கள். காங்கிரஸ் அபேட்சகர் பெருவாரியான வோட்டு மெஜாரிட்டியுடன் வெற்றியடைந்திருக்கிறார். அந்த நான்கு அபேட்சகர்கள் பெற்றிருக்கும் எல்லா வோட்டுகளையும் மொத்தமாகக் கூட்டிப் பார்த்தாலும், அது காங்கிரஸ் அபேட்சகருக்குக் கிடைத்திருக்கும் வோட்டைக் காட்டிலும் எவ்வளவோ குறைவாக இருக்கிறது. டாக்டர் அம்பேத்கரைக் காங்கிரஸில் சேர்ப்பதற்காக அஹமதாபாத் வாஸிகள் செய்த இந்த அருஞ் சேவையை யாரும் புகழாதிருக்க முடியுமா? இந்த உதாரணத்தை பம்பாய் மாகாணத்தின் மற்றப் பகுதிகளும் பின்பற்றுமென்று எதிர் பார்க்கிறோம். டாக்டர் அம்பேத்கருக்கும் முடிவாக ஒரு தேறுதல் வார்த்தை கூறுகிறோம். அவர் குல்லாவைக் கையிலெடுத்துக் கொண்டு காங்கிரஸுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. குல்லாவைத் தலையில் வைத்துக் கொண்டே அவர் காங்கிரஸில் சேரலாம். ஆனால், அந்தக் குல்லாய் மாத்திரம் கதர்க் குல்லாவாக இருக்க வேண்டும்.

புதிய விபத்து

இந்தோனேஷியாவில் இந்தியத் துருப்புகளை உபயோகிப்பதற்காக நாம் எல்லோரும் கோபதாபப்பட்டுக் கொண்டிருக்கிறோம் அல்லவா? அது சுத்தத் தவறு என்பது இப்போதுதான் தெரி

கிறது. இந்திய சர்க்காரின் யுத்த இல
கூட்டுக் காரியதரிசி இதற்குத் தக்க
தாவையும் காரணமும் சொல்லி
கிறார். இந்தியா தானாக, தன்
யாக இதைச் செய்யவில்லை வெ
அதற்கு வேறொரு விபத்து நேர்ந்து
தென்றும், அதன் காரணமாகவே
இந்தோனேஷியா தகராறில்
கொண்ட தென்றும் அவர் சொ
போது நமக்கு எவ்வளவு கவலை உ
கிறது! இந்தியாவுக்கு நேர்ந்
அந்தப் பெரிய விபத்து என்ன
யுமா? "இந்தியா இப்போது
வல்லரசாகி விட்டது என்பது
இந்த இடி விழுந்தது
செய்தியை அவர் சர்வ சாதார
நம் தலையில் தூக்கிப் போட்டிருக்கி

பெரிய வல்லரசான பிறகு,
வல்லரசுகள் செய்யும் அயோக்கிய
மான காரியத்தை இந்தியாவும்
வேண்டியதுதானே! அப்படி இ
தானாக, சொந்தமாக ஒரு அயோ
தனத்தைச் செய்யாவிட்டாலும்,
டன் செய்யும் அயோக்கியத் தன
உடந்தையாகவாவது இருக்க வே
அல்லவா? இந்த முறையிலே
பிரிட்டன் இந்தியத் துருப்புகளை இ
னேஷியாவில் உபயோகித்து
தாம்! இதை இந்திய சர்க்கார்
இலாகாக் காரியதரிசி கொஞ்சங்
கூசப்படாமல் தைரியமாகச் சொ
யிருக்கிறார்.

சர்க்கார் தரப்பில் சொல்ல
சால்ஜாப்புகளையும் சமாதானங்க
இந்திய சட்டசபை அங்கத்தினர்
கொள்ளாமல் காங்கிரஸ் அங்
ரோடு முஸ்லிம் லீக் அங்கத்
சேர்ந்து பிரேரணைக்குச் சா
வோட்டுக் கொடுத்து இந்திய சர்க்
படு தோல்விக்கு உள்ளாக்கி
விட்டார்கள்.

இவ்விதமாக இந்திய சட்டச
முகூர்த்தத்திலே ஆரம்பமாகி
கிறது. ஆரம்பமான முதல் நாளே
காருக்கு முதல் தோல்வி கிடை
கிறது. இதே மாதிரியாகக்
ஸும் லீகும் சேர்ந்து இன்னு
தோல்விகளைக் கொடுப்பார் க
கருதுகிறோம். அவர்கள் சர்
எத்தனை முறை தோற்கடிக்க
மென்று விரும்புகிறார்களோ
முறையும் ஆசைதீரத் தோற்கடி
மூட்டும். ஏனெனில், நாளை க
தேசிய சர்க்கார் ஏற்பட்டு வி
இந்த மாதிரியான வைபவங்க
பஞ்சம் ஏற்பட்டு விடலாம் அல்ல

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெ
கே. மோஹன், தேனாம்பேட்டை, கதீட்ரல் போஸ்ட், சென்னை.

நமது அதிதி

★ ★ ★

மிழ்நாட்டிற்குள்ளே, ஏன், பாரத
திக்குள்ளே என்றும் சொல்லலாம்,
ர் முதலாகப் பெண்களின் உரி
காகப் போராடி வெற்றி யடைந்த
ாமணி யார் என்று தெரியுமா?
நடைய திருநாமம் ஸ்ரீமதி மீனுக்ஷி.
நடைய இருப்பிடம் தென் மது
பதி. மதுரையில் அவருடைய
ல் நலம் மிக்க விசாலமானது;
புறமும் கோபுரங்கள் அமைந்
பாண்டிய நாட்டின் தலைநகரில்
ர பிரசித்தி பெற்ற கோயிலைத்தான்
றிஹோம். அந்தக் கோயிலில் குடி
ன்டு அருள்புரியும் மீனுக்ஷி அம்
ந்தான் குறிப்பிடுகிறோம்!

ழ்நாட்டிலும் பாரத தேசத்திலும்
லையோ புகழ் பெற்ற ஆலயங்கள்
கின்றன. அவை யெல்லாம்
ந்த ஆலயத்தில் சாந்நித்யம்
று விளங்கும் சுவாமிகளின் பெய
யே விளங்குகின்றன. காசி விசுவ
கோயில், பூரி ஜகந்நாதர்
ில், பண்டரிபுரத்துப் பாண்டு
கோயில், காஞ்சி ஏகாம்பரர்
ில், கும்பகோணம் கும்பேசுவர
ி கோயில், ஸ்ரீரங்கம் ரங்கநாதர்
ில், சிதம்பரம் நடராஜர் கோயில்
இப்படிப் பெரும்பாலும் அந்
ஆலயங்களில் பிரதிஷ்டை பெற்
ர சுவாமியின் பெயரைக்
ட வழங்குகின்றன.

ல், மதுரைக் கோயில் மட்டும்
ி அம்மன் கோயில்'தான்.

மாடக் கூடலில் ஸ்ரீ சுந்தரேசு
எத்தனையோ திருவிளையாடல்
புரிந்து ஒரு பெரிய புராணமே
ிந்த போதிலும், கோயிலைக்
ிடும்போது, எல்லாரும் 'மதுரை
ி அம்மன் கோயில்' என்றுதான்
கிறார்கள்.

வே, பெண்ணுரிமை இயக்கம்,
விடுதலை இயக்கம், பெண்
ுவ இயக்கம் ஆகிய இயக்கங்
கெல்லாம் வெகு காலத்துக்கு
ே அஸ்திவாரம் அமைத்து வழி
வெற்றியும் பெற்ற பெருமையும்
மையும் மதுரை மீனுக்ஷி அம்மனையே
ந்தாகும்.

ுதகைய சக்தி வாய்ந்த மீனுக்ஷி அம்
க்கு அடுத்த வாரத்தில் மற்றொரு
ய மகிமை ஏற்படப் போகிறது.

மதுரை மீனுக்ஷி அம்மன் ஆலயத்துக்குள் மகாத்மா காந்தி சென்று அம்மனையும் சுவாமியையும் தரிசிக்கப் போகிறார்!

* * *

சாதாரணமாக மகாத்மாஜி சுவாமி தரிசனத்துக்காக ஆலயங்களுக்குப் போவது கிடையாது. தாம் இருக்குமிடத்திலேயே தான் இறைவனைத் தியானிப்பது வழக்கம். தினந்தோறும் சாயங்காலம் தாம் தங்குமிடங்களில் அடியார் கூட்டத்துக்கு மத்தியில் தெய்வப் பிரார்த்தனை நடத்துவது வழக்கம். தற்சமயம் தியாகராஜ நகரில் ஹிந்தி பிரசார சபைக் கட்டிடத்துக் கருகிலுள்ள மைதானத்தில் மாலை வேளைகளில் அவ்விதம் பிரார்த்தனை நடந்து வருகிறது. லட்சக் கணக்கான ஜனங்கள் கூடிப் பிரார்த்தனையில் கலந்து கொள்கிறார்கள். சென்னை நகரமானது என்றைக்கும் கண்டறியாத காட்சிகளைத் தியாகராஜ நகரில் இந்த வாரத்தில் கண்டு வருகிறது.

இவ்விதம் மகாத்மா காந்தி தாம் தங்குமிடத்திலேயே எங்கும் நிறைந்த இறைவனுக்குப் பிரார்த்தனை நடத்துவது வழக்கமாயிருக்க, மதுரையிலே மட்டும் மீனுக்ஷி அம்மன் ஆலயத்துக்கு எதற்காகச் செல்கிறார்?

ஆறு வருஷத்துக்கு முன்னால் அந்தப் பிரசித்தி பெற்ற ஆலயத்தில் நடந்த ஓர் அற்புத சம்பவத்தின் காரணமாகத்தான்.

அந்த அற்புத சம்பவம் என்ன? ஜகன்மாதாவான மீனுக்ஷி அம்மன், கருணையே வடிவமான பராசக்தி, தன் ஆலயத்தின் கதவுகளை அகலமாகத் திறந்து ஹரிஜனங்கள் உள்படத் தன் புதல்வர்கள் சகலமானவர்களும் கோயிலுக்கு வந்து தன்னைத் தரிசிக்கலாம், தன் திருவருளைப் பெறலாம் என்று கருணை கூர்ந்த சம்பவந்தான்.

அச்சமயம் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்த ராஜாஜியைக் கருவியாகக் கொண்டு மதுரை மீனுக்ஷி அம்மன் அந்தக் காரியத்தை அன்று நடத்தி வைத்தாள்.

இரண்டாயிரம் வருஷமாக நடக்காத சம்பவம், ஒரு நாளும் நடவாது என்று பலரும் எண்ணிய சம்பவம், ஹிந்து மதத்தின் பெயரால் பலரும் மூர்த்தண்ய

மாக எதிர்த்த மேற்படி அபூர்வ சம்பவம் மதுரையில் நடந்தது. அதைக் குறித்து பாரத தேசமே வியந்து கொண்டாடியது.

காங்கிரஸ்காரர்கள் மந்திரி உத்தியோகம் ஏற்றதற்கு இந்த ஒரு காரியமே போதும் என்று எல்லாரும் ஒரு முகமாகச் சொன்னார்கள்.

அந்த மகத்தான சம்பவம் காரணமாகத்தான் இன்று மகாத்மா காந்தி மதுரைக்குப் போகிறார். மதுரை மீனாக்ஷி அம்மன் ஆலயத்துக்கும் போகப் போகிறார்.

* * *

மதுரையிலிருந்து மகாத்மா பழனிக்கும் செல்கிறார்.

ஸ்ரீ மீனாக்ஷி அம்மனின் செல்வப் புதல்வரும், தமிழகத்தின் அதிதேவதையும், தமிழ் மக்களின் குல தெய்வமுமான முருகக் கடவுள் பழனி மலைமீது கோயில் கொண்டிருக்கிறார் அல்லவா?

அன்னை காட்டிய வழியைப் பின்பற்றிப் புதல்வரும் அதே சமயத்தில் தம் ஆலயத்தைச் சகலருக்கும் திறந்து விட்டு அருள் புரிந்தார்.

இது காரணமாகத்தான் மகாத்மா பழனி ஆண்டவர் சந்நிதிக்கும் செல்கிறார்.

மகாத்மா காந்திக்கு இப்போதெல்லாம் பிரயாணம் செய்தல் மிகவும் அசௌகரியமாயிருக்கிறது. பிரயாணத்தையே நிறுத்திவிட்டு சேவாக்கிராமத்தில் தமது ஆசிரமத்தில் இருக்கவே அவருக்கு விருப்பம்.

கல்கத்தாவிலிருந்து சென்னை வரும் வழியில் ஒரிஸ்ஸாவிலும் ஆந்திர நாட்டிலும் அவரை இறங்கச் செய்வதற்கு ஆங்காங்குள்ள தேசபக்தர்கள் எவ்வளவோ பிரயத்தனப் பட்டார்கள். அதெல்லாம் பலிக்கவில்லை.

பங்களூரிலிருந்து தூதுகோஷ்டி வந்து பங்களூர் சீதோஷ்ண நிலைமை மிக நன்றாயிருக்கிறதென்று சொல்லி, "ஒரு லட்சம் ரூபாய் பண முடிப்பு அளிக்கிறோம்" என்றும் சொன்னார்கள்.

அதையும் மகாத்மா ஒப்புக் கொள்ளவில்லை.

ஆனால் மதுரைக்கும் பழனிக்கும் யாரும் அழைக்காமலே போகிறார்.

இதிலிருந்து, மகாத்மா காந்தி ஹரிஜன சேவையையும் ஆலயப் பிரவேச இயக்கத்தையும் எவ்வளவு பரம முக்கியமாகக் கருதுகிறார் என்
வெளியாகிறது.

* * *

தமிழ் நாட்டில் கொஞ்ச நாள
சில காங்கிரஸ் வாதிகளும் தேசப
களும் ஒரு விபரீதமான போக்
கைக் கொண்டு வருவதைப் ப
கிறோம். மதுவிலக்கு, ஹரிஜன சே
ஆலயப் பிரவேசம் முதலிய நிர்மா
திட்டங்களைக் குறித்து அவ
அசட்டையாகப் பேசுவது வழக்க
வருகிறது. சுதந்திரப் போரின்
ருடைய நிவிரத்தைக் காட்டுவதற்
அவர்கள் அவ்விதம் பேசி வருகிறார்

ஆனால், அவர்களுடைய போ
மிகப் பிசகான போக்கு. தேச சுதந்
தையே தடை செய்யும் போக்கு
பதில் சந்தேகமில்லை.

சட்டமறுப்புச் செய்து சிறை
வது, சட்டசபையில் புட்டுக்கட்
போடுவது எல்லாம் அந்தந்த சந்
பம் நேரும்போது அவசியமான
யங்கள் தான்.

ஆனால் மேற்படி திட்டங்களை
லாம் எவ்வளவுதான் கையாண்ட
தேசம் சுதந்திரத்தை இழந்த
அடிப்படையான காரணம் எது
அதை நிவர்த்தி செய்தால் அல்ல
நாம் சுதந்திரம் பெற முடியாது.
டிப் பெற்றாலும் அது நீடித்து நிற்க

புத்தி பூர்வமாக யோசித்துப் ப
தாலும் சரி, கர்மவினை என்று
துக்கொண்டாலும் சரி, இந்தியா
திரம் இழந்ததற்கு ஒரு முக்கிய
ணம் நம்மிடையேயுள்ள தீண்டா
கொடுமைதான்.

வெளிநாட்டிலிருந்து இந்தியா
வந்த முஸ்லிம்கள் ரொம்ப அதிக
வைத்துக் கொண்டால் சில ல
பேர்தான் இருப்பார்கள். அவ
இப்போது எட்டு கோடிப் பே
மேல் பெருகிப் பாகிஸ்தான் பூதத்
கிளப்பி விருப்பதும், "தேசத்
துண்டாடு; இல்லாவிடில் தேச
திரத்துக்கு முட்டுக்கட்டை
வோம்" என்பதும், எல்லாம்
டாமையின் காரணமாக ஏற்
விளைதான்.

எனவே, இந்தியாவின் விடுத
மற்றப் போர்த் திட்டங்கள் எவ்வ
முக்கியமோ அவ்வளவு தீண்ட
விலக்கு, ஆலயப் பிரவேசம் ஆகிய
யும் முக்கியமாகும்.

இதை யெல்லாம் மகாத்மாவின்
துரை — பழனி விஜயம் நமக்கு
ன்கு நினைவூட்டுகிறது.

* * *

சென்னை நகர வாசிகள் கூடிய வரை
ில் மகாத்மாவிடம் நல்ல பெயர் வாங்கி
ிருக்கிறார்கள். சில சமயம் மகாத்மா
ின் கண்டனங்களுக்கும் புகார்களுக்
ும் ஆளான போதிலும், லட்சக் கணக்
ான கூட்டம் என்பதை எண்ணும்
ோது ஜனங்கள் இவ்வளவு அமைதி
ாகவும் ஒழுங்குடனும் நடந்து கொண்
து பாராட்டத் தக்கதே யாகும்.

ஆனால் மதுரை வாசிகளும் பழனி
ாசிகளும் சென்னைக்காரர்களைத் தோற்
டித்து விடவேண்டும். மகாத்மாவின்
ிஜயத்தின்போது பூரண அமைதி
டனும் ஒழுங்குடனும் நடந்து
காண்டு சென்னை வாசிகளைக் காட்டி
ும் மகாத்மாவிடம் நல்ல பெயர்
ாங்கவேண்டும்.

தமிழர்கள் செய்த தவப் பயனால் வந்
ிருக்கும் நமது ஒப்பற்ற பெருமை
ாய்ந்த அதிதி தமிழ்நாட்டை விட்டுத்
திரும்பிப் போன பிற்பாடும், அவ
ுடைய உள்ளத்தில் தமிழ் நாட்டைப்
ற்றிய இனிமையான ஞாபகங்களை
குடி கொண்டிருக்கும்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

* * *

சென்னையில் முதல் நாள் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி பேசும்போது, தாம் முதன் முதலில் 1919-ம் வருஷத்தில் சென்னைக்கு வந்தது பற்றிய ஞாபகத்தை எடுத்துக் கூறினார். அப்போது தமக்கு முன்பின் பழக்கமில்லாத ராஜாஜியின் வீட்டில் தங்கியதாகவும், அப்போது தான் ஏப்ரல் 6-உ சத்யாக்கிரஹ தினமாகக் கொண்டாட வேண்டுமென்ற யோசனை தம் மனதில் உதித்ததாகவும் எடுத்துச் சொன்னார். இந்தத் தடவை சென்னைப் பிரயாணம் தமக்கு இஷ்டமே இல்லை யென்றாலும், ஏதோ கடவுளுடைய சித்தத்தினால்தான் இங்கு வரும்படி நேர்ந்ததாகவும் தெரிவித்தார்.

இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னால் நமது ஒப்பற்ற தலைவர் சென்னைக்கு வந்தது எவ்வளவு தேசத்துக்கு மகத்தான பயனுள்ளதாயிற்று, அது போலவே இந்த முறை அவர் விஜயமும் பயனுள்ளதாகட்டும் என்று மதுரை மீனாக்ஷி அம்மனையும் பழனி ஆண்டவரையும் இறைஞ்சிப் பிரார்த்திக்கிறோம்.

அதிதி வருகிருர்!



இரண்டு கோடித் தமிழ் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அதி
அம்பத்தூர் ஸ்டேஷனில் வந்து இறங்குகிருர். தமிழ் மக்களின் சார்பாகத் தலை
ராஜாஜி அவரை வரவேற்கிருர்.

அழைத்துச் செல்கிறார்!



ஹிந்தி பிரசார சபையின் வெள்ளி விழாக் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ என். கோபாலசாமி அய்யங்கார் மகாத்மாஜியை அழைத்துச் செல்ல வந்தார். ஆனால் நடையைப் பார்க்கும் போது யார் யாரை அழைத்துச் செல்கிறார் என்பது சந்தேகமாய்த்தானிருக்கிறது.

ஆயிரரூவா நோட்டு





ஆயிரரூவா நோட்டுரேஞ்ச
    ஆட்டம்ஒஞ்சு போச்சுதம்பி!
வாயடைத்துப் பேசஇங்கே
    வகைகெட்டுப் போச்சுதம்பி!


நெல்லுவெலே ஏத்தபோது
    நெருக்கிப்பணம் சேத்தவங்க,
கள்ளவெலே வைச்சுநித்தம்
    கண்டபடி வித்தவங்க,

சொல்லுக்கொரு லஞ்சம்வாங்கி
    சொருக்கிப்பணம் சேத்தவங்க,
மல்லுத்துணி ஒளிச்சுவைச்சு
    மாறுவெலே சொன்னவங்க,



எல்லோரும் முழிக்கிறாங்க
    இடிவிழுந்து போச்சுதம்பி!
கல்லாச் சனைஞ்சுநின்னு
    கலங்கியே தவிக்கிறாங்க!

பாங்கியிலே போடஅஞ்சி
    பைநிறைய வைச்சவங்க,
தூங்கும்போது பெட்டிக்கிட்டே
    துணையாய்ப் படுத்தவங்க,



ஏங்கித் தவிக்கிறாங்க
    இரகசியத்தை விளங்குறாங்க!
தூங்கிவழிந்த சாசாங்கம்
    துள்ளி விளிச்சுக்கிச்சு!



சட்டமொன்னு போட்டிருக்கு
    சவாப்சொல்ல வேணும்தம்பி!
பட்டப்பகல் கொள்ளையெல்லாம்
    பாருக்கு வருகுதுபார்!

உப்புக்கண்டம் பறிகொடுத்து
    ஊமையான பாப்பாத்திபோல்,
தப்பும்போது தேளுகொட்டித்
    தவிக்கும் திருடனைப்போல்



கப்புசிப்பு என்றிருந்து
    கலங்குறாங்க மனசுக்குள்ளே
ஒப்புக்கொள்ள மனசுமில்லே
    ஒளிக்கவகை யில்லேதம்பி!



அநியாயம் சேஞ்சதம்பி
    ஆயிரமாய்ச் சேத்தவங்க
பணியாரம் போல்பணத்தை
    பார்த்துப்பார்த்து உருகுறாங்க!

ஒத்தைரூவா நோட்டைக்கண்டு
    ஒருமாசம் ஆயிடுச்சு!
இத்தைப்பத்தி நமக்கென்னடா!
    எழுந்து வாடா, தம்பி! போவோம்.

— காட்டூர்க் கண்ணன்



அத்தியாயம் 17

அரண்மனைப் பூங்கா

திருநாவுக்கரசரின் மடத்தில் குலச்சிறையாரை மங்கையர்க்கரசி பார்த்து ஏறக்குறைய ஒரு வாரம் ஆயிற்று. இந்த ஒரு வாரமும் செம்பியன் வளவனுடைய மகளுக்கு ஒரு யுகமாகச் சென்றது. பாண்டிய குமாரர் இன்று வருவார், நாளை வருவார் என்று அரண்மனையில் பேச்சாயிருந்தது. நெடுமாற பாண்டியன் வரவைக் குறித்து மங்கையர்க்கரசிக்கு எவ்வித ஆவலும் ஏற்படவில்லையென்றாலும், பாண்டியனோடு அன்று தான் மடத்தில் பார்த்த வாலிபனும் வருவான், அவனிடம் அவனுடைய சிநேகிதனைப்பற்றி விசாரிக்கலாம் என்ற ஆவல் அவள் மனதில் பொங்கிக் கொண்டிருந்தது. குலச்சிறையாரை எந்தக் காரணத்தைக் கொண்டாவது தனிமையில் சந்திக்க வேண்டும் என்று அவள் தீர்மானித்திருந்ததுடன், அந்த நோக்கத்தை எப்படி நிறைவேற்றலாம், என்ன காரணம் கற்பித்துச் சொல்லலாம் என்பது பற்றி அவள் உள்ளம் ஓயாமல் சிந்தனை செய்து கொண்டிருந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு ஒரு நாள் காஞ்சி அரண்மனை அல்லோல கல்லோலப் பட்டது. நெடுமாற பாண்டியன் அவனுடைய பரிவாரங்களுடன் காஞ்சிக்கு வந்து சேர்ந்து விட்டதாக மங்கையர்க்கரசி அறிந்தாள்.

வானமாதேவியின் நடு மாளிகையில் நெடுமாறன் தங்கியிருப்பதாகவும் அவனுக்கு இன்னும் உடம்பு பூரணமாகக் குணமாகவில்லையென்றும் பேசிக் கொண்டார்கள்.

ஆனால் மங்கையர்க்கரசியின் மனோரதம் நிறைவேறும் என்பதாக மட்டும் காணப்படவில்லை.

புவனமகாதேவி தினந்தோறும் சிவபூஜை செய்த பிறகு தன் மருமகள் வானமாதேவிக்குப் பிரசாதம் அனுப்புவதுண்டு. மங்கையர்க்கரசி தானே பிரசாதம் எடுத்துக்கொண்டு போவதாகச் சொல்லித் தினந்தோறும் வானமாதேவியின் மாளிகைக்குச் சென்றாள். அம்மாளிகையில் இருக்கும்போது மங்கையர்க்கரசியின் கண்கள் நாலா புறமும் சுழன்று சுழன்று தேடியும் அந்த வாலிபன் காணப்படவில்லை.

ஒரு நாள் மனத் துணிவை வரவழைத்துக் கொண்டு புவனமகாதேவியையே கேட்டாள். "அம்மா! அன்று சைவத் திரு மடத்தில் ஒரு இளைஞரைப் பார்த்தோமே? அவர் பாண்டிய குமாரரோடு வந்திருப்பதாகத் தெரியவில்லையே?" என்றாள்.

அதற்குப் புவனமகாதேவி, "அதை ஏன் கேட்கிறாய், குழந்தாய்! பாண்டிய குமாரன் விஷயம் ரொம்பவும் கவலைக்கிடமாயிருக்கிறது......" என்பதற்குள், "அடாடா! அப்படியா? அவருக்கு உடம்பு இன்னும் சொஸ்தமாகவில்லையா? அதனால்தான் தங்களுடைய மருமகள் எப்போதும் ஒரே கவலையாயிருக்கிறார் போலிருக்கிறது. முன்னேயெல்லாம் நான் சிவபூஜைப் பிரசாதம் கொண்டு போனால் முக மலர்ச்சியுடன் வாங்கிக் கொண்டு என்னிடமும் அன்பாக வார்த்தையாடுவார். இப்போதெல்லாம் ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லை!" என்றாள்.

டேன். திரும்பிப் போக வழி தெரியவில்லை. வானமாதேவியின் அரண்மனைக்கு எப்படிப் போகவேண்டும்? கொஞ்சம் வழி சொல்லு, அம்மா!'' என்று யாரோ சொல்வது கேட்டது.

அவ்விதம் சொல்லிய குரலானது மங்கையர்க்கரசியின் தேகம் முழுவதையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டது. அவளுடைய காலடியிலிருந்த தரை திடீரென்று நழுவிப் போவது போலிருந்தது. அந்தப் பூங்காவனத்திலுள்ள செடி கொடிகள் எல்லாம் அவளைச் சுற்றி வருவதாகத் தோன்றியது. பக்கத்திலிருந்த மந்தார மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு கீழே விழாமல் சமாளித்தாள். அவளுடைய இடது கையில் பிடித்திருந்த வெள்ளிப் பூங்கூடை மட்டும் நழுவிக் கீழே விழ, அதிலிருந்த பல நிறப் புஷ்பங்கள் தரையில் சிதறின.

"ஓஹோ! பயந்து போய் விட்டாயா என்ன? ஏதும் தவறாக எண்ணிக் கொள்ளாதே, அம்மா! உண்மையாகவே வழி தெரியாததினால்தான் கேட்டேன். நான் இந்த ஊர்க்காரன் அல்ல, பாண்டிய நாட்டான். வானமாதேவியின் மாளிகை எந்தத் திசையிலிருக்கிறது என்று சொன்னால் போதும், போய் விடுகிறேன். இந்தத் தோட்டத்தில் வேறு யாருமே காணப் படாமையால் உன்னைக் கேட்கும்படி நேர்ந்தது. நீ யார் என்றுகூட எனக்குத் தெரியாது......'' என்று அந்த மனிதன் சொல்லி வந்தபோது மங்கையர்க்கரசிக்குப் பூரண தைரியம் வந்து விட்டது. சட்டென்று தான் பிடித்திருந்த செடியின் கிளையை விட்டு விட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் நினைத்தது தவறாகப் போகவில்லை.

ஆம், அவன்தான்!

அன்றொரு நாள் விடாமழை பெய்த இரவு தன் தந்தையின் வீட்டுக்கு அதிதியாக வந்து தன் உள்ளங் கவர்ந்து சென்ற கள்வன்தான்!

மங்கையர்க்கரசியின் அதிசயத்தைக் காட்டிலும் பாண்டிய குமாரனுடைய அதிசயம் பன்மடங்கு அதிகமாயிருந்தது.

"ஆ!'' என்ற சத்தத்தைத் தவிர வேறொரு வார்த்தையும் அவன் வாயிலிருந்து வரவில்லை.

பேச நா எழாமல் இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் அடங்கா அதிசயத்தோடும் ஆர்வத்தோடும் பார்த்துக் கொண்டு கைதேர்ந்த சிற்பி அமைத்த கற் சிலைகளைப் போல் சற்று நேரம் நின்று கொண்டிருந்தார்கள்.

கடைசியாக, பாண்டிய குமாரன், உணர்ச்சியாலும் வியப்பாலும் கம்மிய குரலில் "பெண்ணே! உண்மையாக நீதானா? செம்பியன் வளவன் மகள் மங்கையர்க்கரசிதானா? அல்லது இது வும் என் சித்தப் பிரமையா?'' என்றான்.

மங்கையர்க்கரசி மறுமொழி சொல்ல விரும்பினாள். ஆனால் வாயிலிருந்து வார்த்தை ஒன்றும் வரவில்லை. கண்ணிலிருந்து கண்ணீர்தான் வந்தது.

உடனே பாண்டிய குமாரன் அளவில்லாத ஆர்வத்துடன் அவள் அருகில் வந்து, "பெண்ணே! இது என்ன? ஏன் உன் கண்களில் கண்ணீர் பெருகுகிறது? ஏதேனும் நான் பெரிய பிசகு செய்து விட்டேனா? என்ன செய்து விட்டேன்?'' என்று பரபரப்புடன் வினவினான் :—

மங்கையர்க்கரசி விம்மலுக் கிடையில் "ஐயா! அந்த துரதிர்ஷ்டம் பிடித்த மங்கையர்க்கரசி நான்தான்!'' என்றாள்.

"ஏன் இப்படி மனம் நொந்து பேசுகிறாய்? ஏன் இப்படிக் கண்ணீர் விடுகிறாய்? கொஞ்சமும் எதிர்பாராத விதமாய் உன்னை இங்கே பார்த்ததும், எனக்குச் சொல்ல முடியாத சந்தோஷம் உண்டாயிற்று. பிறவிக் குருடன் கண் பெற்றது போன்ற மகிழ்ச்சியடைந்தேன். கடல் கடைந்த தேவர்கள் அமிர்தம் எழக் கண்டதும் அடைந்த ஆனந்தத்தை நானும் அடைந்தேன். எவ்வளவோ மனக் குழப்பத்திலும் கவலையிலும் ஆழ்ந்திருந்தவன் உன்னைக் கண்டதும் அதை யெல்லாம் மறந்து ஒரு கணம் எல்லையற்ற குதூகலம் அடைந்தேன். ஆனால் உன்னுடைய விம்மலும் கண்ணீரும் அந்த மகிழ்ச்சியை யெல்லாம் போக்கி என்னை மறுபடியும் சோகக் கடலில் மூழ்க அடித்து விட்டது. உனக்கு என்ன துயரம் நேர்ந்தது? ஏன் உன்னை துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக் கொள்கிறாய்? உன் துயரத்துக்கும் துரதிர்ஷ்டத்துக்கும் நான்

எந்த விதத்திலாவது காரணம் ஆனேனா? என்னை இங்கே பார்த்தது உனக்குப் பிடிக்கவில்லையா? அப்படியென்றால் இதோ நான் போய் விடுகிறேன். என்னால் உனக்கு எந்தவிதக் கஷ்டமும் ஏற்பட வேண்டாம்! ஆ-ா! ஏற்கெனவே நான் பெரிய மனத் தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாகியிருக்கிறேன். அவ்வளவுக்கும் மேலே, உனக்கு எவ்விதத்திலாவது துன்பம் கொடுத் திருப்பேனானால், இந்த வாழ்க்கைதான் என்னத்துக்கு, உயிரையே விட்டு விடலாம் என்று தோன்றுகிறது."

இவ்வாறு நெடுமாறன் உண்மையான உருக்கத்தோடு சொல்லி வந்த போது, பேதைப் பெண்ணாகிய மங்கையர்க்கரசி பல முறை குறுக்கிட்டுப் பேச விரும்பினாள் என்றாலும், அதற்கு வேண்டிய தைரியம் இல்லாதபடியால் விம்மிக் கொண்டே சும்மா இருக்க வேண்டியதாயிற்று. கடைசியில், பாண்டிய குமாரன் உயர் விடுவதைப் பற்றிப் பேசியதும் அவளுக்கு எப்படியோ பேசுவதற்குத் தைரியம் ஏற்பட்டு, "ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். தங்களால் எனக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை!" என்றாள்.

"அப்படியானால் என்னைப் பார்த்ததும் நீ கண்ணீர் விடுவதற்கும் விம்மி அழுவதற்கும் காரணம் என்ன? இரண்டு வருஷ காலமாக உன்னை மறுபடி எப்போது பார்க்கப் போகிறோம் என்று ஓயாமல் சிந்தித்துக் கொண்டிருந்தேன். மீண்டும் உன்னைச் சந்திக்கும்போது சந்தோஷத்தினால் உன் முகம் எப்படிச் சூரியனைக் கண்ட செந்தாமரையைப் போல் மலரும் என்று கற்பனை செய்து சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக, என்னைப் பார்த்ததும் உன் முகம் அஸ்தமன அர்க்கனைக் கண்ட தாமரையைப்போல் வாடிக் குவிந்தது. உன் கண்களும் கண்ணீர் பெருக்கின. ஏன் அப்படி?"

பாண்டிய குமாரனுடைய கேள்விக்கு மறுமொழி சொல்லாமல் மங்கையர்க்கரசி, "ஐயா! தாங்கள் சொன்னது உண்மைதானா? என்னைத் தாங்கள் அடியோடு மறந்துவிடவில்லையா? இரண்டு வருஷமாக என்னை அடிக்கடி நினைத்துக் கொண்டிருந்தீர்களா? என்னை மறுபடியும் சந்திக்கும் உத்தேசமும் தங்களுக்கு இருந்ததா?" என்று கேட்டாள்.

"அதைப் பற்றி உனக்கு ஏன் சந்தேகம் ஏற்பட்டது? மீண்டும் உன்னைச் சந்திப்பதற்குரிய சந்தர்ப்பத்தை ஓயாமல் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கடைசியில் அந்த சந்தர்ப்பம் கிடைத்தது. மதுரையிலிருந்து இந்த நகரத்துக்கு வரும் வழியில், அன்றொரு நாள் விடா மழை பெய்த இரவில் எனக்கு அடைக்கலம் தந்த செம்பியன் வளவன் மாளிகையை அடைந்தேன். அந்த மாளிகை பூட்டிக் கிடந்ததைப் பார்த்ததும் எனக்கு உண்டான ஏமாற்றத்தைச் சொல்லி முடியாது. அந்தச் சோழ வம்சத்துக் கிழவர் வாதாபி யுத்தத்துக்குப் போய் விட்டதாகவும், மகளையும் கூட அழைத்துச் சென்றதாகவும் சொன்னார்கள். இவ்விதம் நான் கேள்விப்பட்டபோது பட்டப் பகல் ஆனபோதிலும், உலகமே இருளடைந்து விட்டதாக எனக்குத் தோன்றியது. அப்புறம் குலச்சிறை இந்த ஊரிலிருந்து வராக நதிக்கரைக்கு வந்து உன்னை இங்கே பார்த்ததாகச் சொன்ன பிறகுதான் கொஞ்சம் மன அமைதி உண்டாயிற்று" என்றான் நெடுமாறன்.

"ஆகா! அவர் வந்து சொன்னாரா? அப்படியானால், தாங்களும் பாண்டிய குமாரரிடம் உத்தியோகத்தில் இருக்கிறீர்களா?" என்று மங்கையர்க்கரசி கேட்டாள்.

நெடுமாறனுடைய முகத்தில் ஒரு கணம் மர்மமான புன்னகை தோன்றி மறைந்தது. தான் இன்னான் என்பதை மங்கையர்க்கரசி இன்னமும் தெரிந்து கொள்ளாமலே பேசுகிறாள் என்பதை அப்போதுதான் அவன் உணர்ந்தான். அந்தத் தவறுதலை இன்னமும் நீடிக்கச் செய்வதில் அவனுக்குப் பிரியம் ஏற்பட்டது.

"ஆம்; பாண்டிய குமாரரிடம் தான் நானும் உத்தியோகத்தில் அமர்ந்திருக்கிறேன். அதைப் பற்றி உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?" என்று கேட்டான்.

மங்கையர்க்கரசி, "எனக்கு என்ன ஆட்சேபம்? தாங்கள் நல்ல பதவியில் இருந்தால், எனக்குச் சந்தோஷந்தானே? தங்களுடைய சிநேகிதரைத் திருநாவுக்கரசர் மடத்தில் பார்த்தபோது என் மனதிலும் அம்மாதிரி எண்ணம் உண்டாயிற்று. ஒரு வேளை தாங்களும் பாண்டியரிடம் உத்தியோகத்தில் அமர்ந்திருந்து ஒரு வேளை அவரோடு வரக் கூடாதா என்று இந்தப் பேதை மனம் ஆசைப்பட்டது. ஆனால் அது நடக்காத காரியம் என்றும், அத்தகைய அதிர்ஷ்டம் இந்தத் துர்ப்பாக்கியவதிக்குக் கிடைக்கப் போவதில்லையென்றும் எண்ணினேன். தங்கள் சிநேகிதரிடம் தங்களைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று மட்டும் ஆவல் கொண்டிருந்தேன். அவரைச் சந்திக்கலாம் என்ற ஆசையினால் வானமாதேவியின் அரண்மனைக்கு ஏதேதோ காரணம் சொல்லிக்கொண்டு அடிக்கடி சென்றேன். ஆனால் அதையெல்லாம் பற்றி இனி என்ன? என் குலதெய்வம் தங்களையேதான் என் முன் கொண்டுவந்து விட்டதே?"

"ஆனாலும் உன் குல தெய்வம் என்னை உன் முன்னால் கொண்டு வந்து நிறுத்தியபோது நீ சந்தோஷப்பட்டதாகத் தெரியவில்லையே? உன்னை துரதிர்ஷ்டக்காரி என்று சொல்லிக்கொண்டு கண்ணீர் விட்டாயே?" என்று நெடுமாறன் விஷமப் புன்னகையுடன் கேட்டான்.

"சுவாமி! நான் பட்டிக்காட்டில் பிறந்த பேதைப் பெண். பட்டணத்தில் பிறந்து வளர்ந்து சாதுர்யமாகப் பேசக் கற்றவளல்ல. எதிர்பாராதபோது தங்களைத் திடீரென்று பார்த்ததில் பேசத் தெரியாமல் திகைத்து நின்றேன். தாங்களும் என்னைத் தெரிந்து கொள்ளாததுபோல் ஒரு மாதிரியாகப் பேசவே எனக்குக் கண்ணீர் வந்துவிட்டது! என்னுடைய பேதைமையைப் பற்றிச் சொல்லிக் காட்டாதீர்கள்!" என்று மங்கையர்க்கரசி கூறியபோது அவளுடைய கண்களில் மறுபடியும் கண்ணீர் துளித்தது.

"என் கண்ணே! என்னை மன்னித்து விடு! இந்த மூர்க்கன் உன் கண்ணில் மறுபடியும் கண்ணீர் வரச் செய்தேனே?" என்று சொல்லிக் கொண்டு நெடுமாறன் தன் அங்கவஸ்திரத்தின் தலைப்பினால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான்.

சற்றுப் பொறுத்து மங்கையர்க்கரசி "சுவாமி! வெகுநேரம் ஆகிவிட்டது! பூஜை நேரம் நெருங்கி விட்டது. நான் போக வேண்டும்" என்றாள்.

"கட்டாயம் போகத்தான் வேண்டுமா?" என்று நெடுமாறன் விருப்பமில்லாத குரலில் கேட்டான்.

"ஆம், போக வேண்டும். புவனமகாதேவி காத்துக் கொண்டிருப்பார்கள். ஒரு வேளை நான் வரவில்லையென்று தாதியை அனுப்பினாலும் அனுப்புவார்கள்."

"அப்படியானால் நாளைய தினம் இதே நேரத்தில் இங்கு நீ வரவேண்டும். தவறக் கூடாது. மேலே நம்முடைய காரியங்களைப் பற்றி ஒன்றுமே பேசவில்லையே?" என்றான் நெடுமாறன்.

மங்கையர்க்கரசி திடுக்கிட்டவளாய் நெடுமாறனை நிமிர்ந்து பார்த்து, "பாண்டிய குமாரர் வாதாபி யுத்தத்துக்குப் போனால் நீங்களும் அவரோடு போவீர்களா?" என்று கேட்டாள்.

"ஆமாம், போக வேண்டியதுதானே? ஏன் கேட்கிறாய்? நான் போருக்குப் போவது உனக்குப் பிடிக்கவில்லையா?" என்றான் நெடுமாறன்.

"எனக்குப் பிடிக்கத்தான் இல்லை. யுத்தம், சண்டை என்பதே எனக்குப் பிடிக்கவில்லை. எதற்காக மனிதர்கள் ஒருவரையொருவர் துவேஷிக்க வேண்டும்? ஏன் ஒருவரையொருவர் கொன்று கொண்டு சாகவேண்டும்? ஏன் எல்லாரும் சந்தோஷமாகவும் சிநேகமாகவும் இருக்கக் கூடாது?" என்றாள் மங்கையர்க்கரசி.

நெடுமாறன் தன் மனதுக்குள் "உன்னைப் போன்ற கன்னித் தெய்வங்களும், காதலும் இந்த உலகில் இருக்கும்போது யுத்தம் என்பது மூடத்தனந்தான். சமண முனிவர்கள் சொல்வது சத்தியமே!" என்று எண்ணிக் கொண்டான்.

வெளிப்படையாக, "ஆனால் உன் தகப்பனார் யுத்தத்துக்கு ஏன் போனார்?

அவரை ஏன் நீ அனுப்பினாய்?" என்று கேட்டான்

"நான் ஆன மட்டும் அவரைத் தடுத்துப் பார்த்தேன். அவர் ஏதோ வீரம் என்றும், சோழ குலத்தின் மானம் என்றும் சொல்லி விட்டு என்னை இங்கு அநாதையாக விட்டு விட்டுப் போய் விட்டார்!" என்றாள் மங்கையர்க்கரசி.

"என் கண்ணே! நான் ஒருவன் இங்கு இருக்கும் போது உன்னை அநாதை என்று சொல்லிக் கொள்ளாதே! அது எனக்குக் கர்ண கடூரமாயிருக்கிறது!" என்றான் நெடுமாறன்.

"நீங்களும் என்னை அநாதையாக விட்டு விட்டு யுத்தத்துக்குப் போகத் தானே போகிறீர்கள்?" என்று மங்கையர்க்கரசி சொல்லி நெடுமாறனைப் பார்த்த பார்வையில் இரக்கமும் திக்தையும் கலந்திருந்தன.

நெடுமாறன் மீண்டும் மர்மமான புன்னகை புரிந்து, "யுத்தத்தைப் பற்றி உன்னுடைய அபிப்பிராயத்தைப் பாண்டிய குமாரரிடம் சொல்லிப் பார்க்கிறேன். ஒரு வேளை அவருடைய மனம் மாறினாலும் மாறலாம். எல்லா வற்றிற்கும் நாளை மாலை இதே நேரத் துக்கு இங்கு நீ கட்டாயம் வரவேண் டும்; வருவாயல்லவா?" என்றான்.

"அவசியம் வருகிறேன். இப்போது ரொம்ப நேரமாகி விட்டது. உடனே போகவேண்டும்" என்று கூறி மங்கையர்க்கரசி கீழே கிடந்த புஷ்பக் கூடையை எடுப்பதற்குக் குனிந்தாள்.

நெடுமாறனும் குனிந்து தரையில் சிதறிக் கிடந்த புஷ்பங்களைக் கூடையில் எடுத்துப் போட்டு மங்கையர்க்கரசியின் கையில் அதைக் கொடுத்தான். அப்படிக் கொடுக்கும் போது பயபக்தியுடன் பகவானுடைய திருமால்யத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்வதுபோல் அவளுடைய மலர்க் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

மெய்சிலிர்ப்பு அடைந்த மங்கையர்க்கரசி பலவந்தமாகத் தன் கையை நெடுமாறனுடைய பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டு புவனமகா தேவியின் அரண்மனையை நோக்கி விரைந்து நடந்தாள்.

"ஆமாம், குழந்தாய்! வானமா தேவி கவலைப்படுவதற்கு ரொம்பவும் காரண மிருக்கிறது. நெடுமாறனுக்கு உடம்பு இப்போது சௌகரியமாகி விட்டது. ஆனால் அவனுடைய மனத்தைச் சமணர்கள் ரொம்பவும் கெடுத்திருக்கிறார்கள். அவனோடு பாண்டிய நாட்டின் புகழ் பெற்ற வீர மறவர் சைன்யம் வந்திருக்கிறது. அந்த சைன்யத்தைத் திருக்கழுக்குன்றத்தில் தங்கச் செய்திருக்கிறார்கள். இலங்கை இளவரசனும் நாம் அன்று பார்த்த குலச்சிறை என்ற வாலிபனும் திருக்கழுக்குன்றத்திலேதான் இருக்கிறார்களாம். குழந்தாய்! விபரீதம் ஒன்றும் நேராதிருக்க வேண்டுமே என்று அம்பிகைபாகனை அல்லும் பகலும் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். என்னைக் காட்டிலும் வானமாதேவியின் தலையில் பெரிய பாரம் சுமந்திருக்கிறது. பாவம்! அவள் ஒரு வாரமாய்த் தூங்கவில்லையாம்!" என்றாள் மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி.

பாண்டிய குமாரனுடைய வரவினால் என்ன விபரீதம் ஏற்படக் கூடும், எதற்காக எல்லாரும் இவ்வளவு கவலையில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதெல்லாம் மங்கையர்க்கரசிக்குத் தெளிவாக விளங்கவில்லை. அதைப் பற்றி அவ்வளவாக அவள் கவனம் செலுத்தவும் இல்லை. அவளுக்குத் தன்னுடைய கவலையே பெரிதாக இருந்தது. குலச்சிறை என்று பெயர் சொன்ன வாலிபனை ஒரு வேளை தான் பார்க்க முடியாமலே போய் விடுமோ, அவனுடைய சிநேகிதனைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொள்ள முடியாமற் போய் விடுமோ என்ற ஏக்கம் அவள் உள்ளத்தில் குடிகொண்டு வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் சிந்திக்க முடியாமல் செய்தது.

இத்தகைய மனோ நிலைமையில் ஒரு நாள் மாலை நேரத்தில் அரண்மனைப் பூங்காவனத்தில் புவனமகாதேவியின் சிவபூஜைக்காக மங்கையர்க்கரசி மலர் பறித்துக் கொண்டிருந்தாள். பன்னீர், மந்தாரை, பொன்னரளி, செவ்வரளி முதலிய செடிகளிலிருந்தும், சம்பங்கி, சாதி மல்லிகைக் கொடிகளிலிருந்தும் அவளுடைய மலர்க் கரங்கள் புஷ்பங்களைப் பறித்துப் பூக்கூடையில் போட்டுக் கொண்டிருந்தன. ஆனால் அவளுடைய உள்ளமோ இரண்டு வருஷங்களுக்கு முன்பு விடாமழை பெய்த ஒரு நாள் சாயங்காலம் தன் தந்தையின் புராதன மாளிகையைத் தேடி வந்த இளைஞர்களைப் பற்றியும், அவர்களில் ஒருவன் தன் உள்ளத்தைக் கொண்டு போனதைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தது. "ஒரு நாள் உன்னைத் தேடிக் கொண்டு மறுபடியும் வருவேன்" என்று அவன் கூறிய வாக்குறுதி நீரின் மேல் எழுதிய எழுத்துத்தான் போலும்! "இந்த உலகில் எனக்கு ஒரே துணையாக இருந்த தந்தையும் போர்க்களத்துக்குப் போய்விட்டார். இனிமேல் என் கதி என்ன ஆகப்போகிறது?" என்று எண்ணியபோது மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் துளித்தது.

செடி கொடிகளின் வழியாக யாரோ புகுந்து வருவது போன்ற சலசலப்புச் சத்தம் கேட்டு மங்கையர்க்கரசி சத்தம் வந்த திசையை நோக்கினாள். ஆம், யாரோ ஒரு மனிதர் அந்த அடர்ந்த பூங்காவின் செடிகளுக்குள்ளே நுழைந்து வந்து கொண்டிருந்தார். ஆனால் அவருடைய முகம் தெரியவில்லை.

அந்தப்புரத்துப் பூந்தோட்டத்தில் அவ்விதம் அலட்சியமாக வரும் மனிதன் யாராயிருக்கும்? மாமல்ல சக்கரவர்த்தியைத் தவிர வேறு ஆண் மக்கள் யாரும் அந்தத் தோட்டத்துக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று மங்கையர்க்கரசி கேள்விப்பட்டிருந்தாள். பூஞ்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றி அந்தப் பூங்காவனத்தைப் பராமரிப்பதற்குக் கூட ஸ்திரீகளே நியமிக்கப்பட்டிருந்தார்கள். அப்படியிருக்க, இவ்வளவு துணிச்சலாக அந்தத் தோட்டத்தில் நுழைந்து வரும் அன்னிய மனிதன் யார்?

யாராயிருந்தாலும் இருக்கட்டும், நாம் திரும்பி புவனமகா தேவியின் அரண்மனைக்குப் போய் விடலாம் என்ற எண்ணத்தோடு மங்கையர்க்கரசி சட்டென்று திரும்பி நடக்கத் தொடங்கினாள்.

அதே சமயத்தில், "யார் அம்மா, அது? இந்தப் பூந்தோட்டத்துக்குள் தெரியாத்தனமாகப் புகுந்து விட்-

1945-ம் வருஷத்துக் "கல்கி" சிறுகதைப் போட்டி

★

மேற்படி சிறுகதைப் போட்டிக்கு வந்த கதைகளில் பரிசு பெற்ற ஆறு கதைகளைத் தவிர, பின்வரும் கதைகள் "கல்கி"யில் பிரசுரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கின்றன.

மற்றக் கதைகளில் தபால் தலையுடன் வந்தவை யாவும் அந்தந்த விலாசத்துக்கு ரிஜிஸ்டர் தபாலில் திருப்பி அனுப்பப்பட்டன.

★

பிரசுரத்துக்கு எடுத்துக் கொண்ட கதைகள்

1. உள்ளமும் வெளியும் — "ஸை்ரோ"
2. பலி—லக்ஷ்மி கல்யாண சுந்தரம்.
3. கண்டக்டர் சுந்தரப்பன் — எஸ். வேம்பு.
4. வண்டிக்காரன் — ஆ. விஜயராகவன்.
5. பார்வதியின் ஆவி — "நாரன்"
6. பிரார்த்தனை — பத்மா.
7. கண்ணாடி வளையல் — நடராஜே.
8. மெய்யும் பொய்யும் — நடராஜே.
9. குற்றவாளி யார்? — எஸ். கிருஷ்ணமூர்த்தி.
10. மிருதுளதா — ரசிதேவி.
11. குண்டலகேசி — சின்ன அண்ணாமலை.
12. அழகும் அன்பும் — வி. ஆர். ஆர். மணி.
13. பூந்தோட்டம் — எஸ். ஆர். ராமாநுஜம்.
14. பிறந்த நாள் பரிசு — வி. எஸ். சுந்தரராஜன்.
15. தெய்வ பந்தம் — ஆர். கிருஷ்ணவேணி.
16. பிராயச் சித்தம் — சௌந்தரம்.
17. என் அத்தான் — ஆர். வெங்கடேசுவரன்.
18. சிதைந்தது எது? — "ரதி"
19. காவேரியின் காதல் — எஸ். என். ராமகிருஷ்ணன்.
20. காதலா, தியாகமா? — என். வி. துரைசாமி.
21. பரிவும் பாவமும் — சிவகாமு.
22. கதாநாயகன் — "சுகி"
23. மறு மணம் — பி. சம்பத் அய்யங்கார்.
24. நியாயவான் - எம். எஸ். கமலா.
25. மீண்ட சுவர்க்கம் — என். நாராயணன், பி.ஏ.,
26. தாயின் வஞ்சம் — எஸ். கோமதி சுப்ரமண்யம்.
27. தாரத்துப் பச்சை — பி. எஸ். அலமேலு.
28. கண்ணம்மா — வெங்கடலக்ஷ்மி.
29. ஏமாந்த மாமனார் — "வீர வேலவன்"
30. எதிர்பாராதது — எம். வி. பாலசுப்ரமணியன்.
31. போட்டியில் தேர்வை — வி. ராமராஜ்.

ஸ்ரீமதி எஸ். லீலாவதி பி. ஏ.



சிறந்த சிறு கதை எழுத்தாளரான ஸ்ரீமதி ஜானகிலக்ஷ்மி வராகன் அவர்களின் செல்வக் குமாரத்தி இவர். இவர் சென்ற வருஷம் பி. ஏ. பரீட்சையில் மைசூர் சமஸ்தானத்திலேயே முதன்மையாகத் தேறியிருக்கிறார்.

சில தினங்களுக்கு முன்பு மைசூரில் நடந்த 'கான்வொகேஷன்' வைபவத்தின்போது பரீட்சையில் முதன்மையாகத் தேறியதற்காக இவருக்கு மைசூர் மகாராஜா இரண்டு தங்கப் பதக்கங்களையும் இரண்டு பண முடிப்புகளையும் பரிசளித்துப் பாராட்டினார்.

ரங்கூன் குடை

பூ. பாலகிருஷ்ணன்



1

"மாலைக் காற்று மருந்து" என்று பாலுவின் வாய் முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

ஆனால் அப்பொழுது அடித்துக்கொண்டிருந்த காற்று மருந்தாக இல்லை. வானம் மப்பு மந்தாரத்துடன் இரவில் பெய்யப் போகும் சோனாமாரிக்கு அறிகுறியா யிருந்தது. லேசாகச் சாரல் தூறிக்கொண்டே யிருந்தது. கூதல் காற்று வீசிக் கொண்டிருந்தது.

இந்தக் காற்றை மருந்து என்று எவ்வாறு கூற முடியும்?

குளிரில் பாலகோபாலனின் உடல் சிலிர்த்தது. அவன் கூட வந்துகொண்டிருந்த ஆயிரக் கணக்கான இந்திய வீரர்களின் உடல்களும் சிலிர்த்தன.

மேலே காக்கி யுடை. காலில் ராணுவ பூட்ஸ். இடது தோளில் ஒரு தண்ணீர்க் குப்பி. வலது தோளில் ஒரு பை.

பர்மாவில் ஜப்பானியரின் மூர்க்கத்தனமான மின்னல் தாக்குதலால் பின் வாங்கி வந்து கொண்டிருந்த அந்த இந்திய வீரர்கள் மேற்கண்டவாறுதான் காட்சி யளித்தார்கள்.

மற்ற வீரர்களிடம் இல்லாத ஒரு வஸ்து பாலுவின் கையில் இருந்தது. அதுதான் 'ரங்கூன்

டை.' அது மூங்கிலால் விசித்திர வேலைப்
ாட்டுடன் செய்யப்பட்டிருந்தது. அதை
வன் மூன்று மாதங்களுக்கு முன்பு
க்கடனிலிருந்த பொழுது வாங்கியிருந்
ான். பின்வாங்கும் உத்தரவு கிடைத்த
ும் சங்கடன் ஞாபகார்த்தமாக இது ஒன்று
து இருக்கட்டுமென்று அதையும் கூடவே
டுத்து வந்து கொண்டிருந்தான்.

ஆயிற்று; சின்ட்வின் நதியைக் கடந்
ாகி விட்டது. இன்று இரவு பல்லைக் கடித்
க் கொண்டு 'தாமு' போய்ச் சேர்ந்து
ிடலாம். அதாவது இந்திய எல்லைக்குள்
்து விடலாம்.

என்ன இன்பகரமான உணர்ச்சி!

பாலு சிந்தனையிலாழ்ந்த வண்ணம்
டந்து கொண்டே யிருந்தான். அந்த
ங்கடன் குடையை அவன் வாங்கிய அன்று
ந்தக் குதூகல நகரம் எவ்வளவு மேனி
மா யிருந்தது! எவ்வளவு 'கல கல' என்
ருந்தது! எவ்வளவு ஜனத்திரள் வீதி
ிில் மொய்த்துக் கொண்டிருந்தது!

ஆனால் அவன் ரங்கூனை
ட்டுக் கிளம்பிய அன்று?

"காண்பதெல்லாம் நிலை
ல்லை; உலக வாழ்வு அநித்யம்"
ன்று வாய் விட்டுப் பாடினான்
லு.

* * *

அரைத் தூக்கத்துடன்
ல்லாரும் நடந்து கொண்டிருந்
ார்கள். அவர்களது நடையில் சாதுவத்
ன் பிரசித்தி பெற்ற 'டாக் டாக்'
ப்தம் உண்டாக வில்லை. ஒவ்வொரு
டி வைக்கும் பொழுதும் கால் ஒரு
ழம் சேற்றில் நுழைந்து பின் வாங்
க் கொண்டிருந்தது! அந்தக் காட்டுப்
ப்ரதேசத்தில், அந்தக் கும்மிருட்டிலும்
மழையிலும் காற்றிலும், 'நம் கூடப் பல்லா
ர் இருக்கின்றனர்' என்ற உணர்ச்சியே
வர்களுக்குத் துணையா யிருந்தது. காரிரு
ில் அவ்வப்பொழுது தோன்றும் ஒரு மின்
லே அவர்களுக்கு வழிகாட்டியா யிருந்து
ையின் இருபுறமும் இருந்த 'கிடு கிடு'
தானங்களில் விழாமல் அவர்களைக்
ப்பாற்றிற்று. "கன்னலும் தேனும்
ியும் இன்பாலும் கதலியும் செந்
ல்லும்" எக்காலும் நல்கும் பாரதத்தை
ருங்கி விட்டோம் என்ற எண்ணமே
வர்களுக்கு நம்பிக்கையையும் புதிய
த்தையும் அளித்தது.

பொழுது புலரும் சமயம். அன்றைய 'மார்ச்' முடிந்து விட்ட தென்றும் அங்கேயே எல்லோரும் படுத்துக் களைப்பாறலாம் என்றும் உத்தரவு கிடைத்தது. மழையையும் காற்றையும் பொருட் படுத்தாமல் அந்தச் சேற்றிலேயே எல்லோரும் ஒருவிதமாகப் படுத்தார்கள். சிறிது நேரத்தில் ஆழ்ந்த நித்திரையும் வந்து விட்டது.

பாலகோபால் மறுபடி எழுந்திருந்த பொழுது பகல் பன்னிரண்டு மணியிருக்கும். இப்பொழுது மழையில்லை. ஆனால் மேகம் கவிந்திருந்தது.

சுற்று முற்றும் பார்த்தான். அருகே இருந்தவர்கள் பேசிக் கொண்டிருந்து அவர்கள் அப்பொழுது இருந்த இடம்தான் 'தாமு' என்று தெரிய வந்தது.

தெரிந்ததும் அவனது முதல் உணர்ச்சி ஒரு பெரிய ஏமாற்றம்தான். 'தாமு' ஒரு பெரிய பட்டணம் என்று அவன் நினைத்துக் கொண்டிருந்தான். அது ஒரு சிறிய குக்கிராமம் என்றும் அங்கிருந்த கிராமவாசிகள் எற்கெனவே அங்கிருந்து ஓடி விட்டார்கள் என்று தெரிந்ததும் ஏமாற்றம் உண்டாவது சகஜமே யல்லவா?

சற்றுத் தூரத்தில் ஒரு சிறிய பாழடைந்த புத்தர்கோவில்தெரிந்தது. "யாருக்கு வேண்டியிருக்கிறது இந்த புத்தர் கோவில்!" என்று நினைத்தான் பாலு.

3வது
பரிசுக் கதை

இன்னும் ஐந்து இரவுகள் மலைப்பாங்கான காட்டுப் பாதையில் நடந்தால் ஆறாம் நாள் காலையில் மணிப்பூர் சம வெளியை அடையலாம் என்று தெரிய வந்தது. மணிப்பூர் சம வெளியில் அவர்கள் காணப்போகும் முதல் கிராமம் பலேல் என்றும், அங்கு ஒரு 'மிலிடரி கேம்ப்' அமைக்கப்பட்டிருக்கிற தென்றும் அங்கே சாதமும் ரொட்டியும் கிடைக்கு மென்றும் வதந்திகள் பரவின.

அந்த ஐந்து இரவுகளும், 'பலேல்' பாலுவின் மூல மந்திரமா யிருந்தது.

"பலேல் போய்ச் சேர்ந்து விடலாம். பின்பு நல்ல சாதமும் செய்யும்!"

பாலு இத்தனை நாள் பட்ட கொடுந்துன்பங்களைக்கூட மறந்து விட்டான். மழையிலும், காற்றிலும், பட்டினி — தாகத்திலும் குன்றியிருந்த அவன் உடம்பில் ஒரு புதிய தெம்பு உண்டாயிற்று.

2

ஐந்தாம் நாள் இரவு. பாலகோபாலன் நடந்து கொண்டேயிருந்தான். மழை லேசாகத் தூறிக் கொண்டேயிருந்தது. குளிர்ந்த காற்று அவனது உடல் வன்மையைச் சோதித்தது.

திடீரென்று பாலுவுக்குக் கீழ் நோக்கிச் செல்லும் உணர்ச்சி உண்டாயிற்று. ஒரு மின்னல் வெளிச்சத்தில் கீழ் நோக்காகப் பாதை தன் முன் சரிந்து போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அடுத்த மின்னொளியில் வெகு தூரத்தில் ஒரு பெரிய வெளி தென்பட்டது.

“இதுதான் மணிப்பூர் சமவெளியா?”

சந்தோஷத்தை அவனால் அடக்க முடியவில்லை.

பொழுது புலரும் சமயத்தில் மறுபடியும் அந்த மானிட வெள்ளம் நின்றது. பலேல் ‘மிலிடரி கேம்ப்’ வந்து விட்டதென்றும் எல்லோரும் அவரவர்கள் நிற்குமிடத்திலேயே படுத்துத் தூங்கலாம் என்றும் செய்தி கிடைத்தது.

உற்சாகத்தில் சிறிது நேரம் பாலுவுக்குத் தூக்கம் வரவில்லை. ஆனால் விரைவில் நித்திரா தேவியின் அயர்வு நீக்கும் கரங்கள் அவனைப் பற்றின. அவன் அவற்றின் வசமானான்.

மறுபடியும் அவன் எழுந்திருந்தபொழுது நடுப்பகலாயிருந்தது. வாதுகள் பேசிடும் மாந்தர் குரலும் மதலையழும் குரலும் தாமுவில் தனக்கு ஏற்பட்ட ஏமாற்றம் இங்கே ஏற்படாது என்ற தைரியத்தை அவனுக்கு ஊட்டின. சிறிது தூரத்தில் லுங்கி அணிந்த மணிப்பூர்ப் பெண்டிர் ஏதோ வியாபாரம் செய்து கொண்டிருந்தனர். நம்மவனை போல் உடை உடுத்தியிருந்த ஆடவர்க குறுக்கும் நெடுக்கும் போய்க் கொ டிருந்தனர்.

“ஹிந்துஸ்தானத்தின் மண்ணை மறுப யும் மிதித்து விட்டோம்!” என்று அவ நெஞ்சு துள்ளிற்று.

மெதுவாக எழுந்து பெண்டிர் வியாபா செய்து கொண்டிருந்த இடத்திற் சென்றான். கூடவே அவனது தண்ணீ குப்பியும், ‘ஹேவர்ஸேக்’கும் சங்க கூடையும் சென்றன. அவற்றை வெ எங்கு வைப்பது?

வேக வைத்த சோளக் கொண்டைக அவல், திலக்கடலை, வெல்லம், பட்டாண சுண்டல், — இவைதான் அப் பெண் விற்றுக் கொண்டிருந்த சாக்கு. அ அதுவே ஒரு பெரிய கடைவீதி போ அவனுக்குத் தோன்றிற்று. கொஞ்சம் அ லும் சுண்டலும் வாங்கிக் கொண்டு ‘க ப்’க்குள் வந்து சேர்ந்தான். அவனுக்கிரு பசியில் அதுவே தேவாமிர்தமாயிருந்த

மத்தியானம் இரண்டு மணி சுமாருக் அந்தக் ‘கேம்’பில் எல்லோருக்கும் ச மும் பருப்பும் கிடைத்தன. பல நா களுக்குப் பிறகு சாதத்தைக் கண்ட பா வுக்குத் தன் கண்களையே நம்ப முடி வில்லை. அதைச் சாப்பிடும் பொழுது இ வரை அவ்வளவு ருசியான சாப்பாடு சா பிட்டதே யில்லை என்று அவனுக்கு தோன்றிற்று.

சாதம் சாப்பிட்டுச் சிறிது நேரம் ஆ தும் அவனது களைப்பும் பறந்தோ போயிற்று. சுற்று முற்றும் பார்த்த தூரத்தில் ஒரு சிற்றாறு ஓடிக் கொண்டிரு



பது தெரிந்தது. அத ருகே கிராமவாசிகளி குடிசைகள் சில வரிசை யாக இருந்தன.

“சரி, சுத்தமாக ஸ் னம் செய்து விட்டு லாம்” என்று கிளம்பினா

ஆற்றினருகிலிருக் குடிசை யொன்றில் உ காத்து சாறுவை உ யைக் கழற்ற ஆ பித்தான்.

அச்சமயம் குடிசை லிருந்து ஒரு மணி பூர் யுவதி வெளியே வ தாள். திண்ணையில் அ

ன் ஒருவனைப் பார்த்ததும் முதலில் வளுக்குத் தூக்கென்றது.

மது கிலிஷம் அவனது முகத்தில் மணிப் மாதர்களுக்கே உரித்தான புன்னகை ழ ஆரம்பித்தது. அவன் பர்மாவி ந்து வருபவன் என்பதை அவனது ாற்றத்திலிருந்து ஊகித்துக் கொண் ன். அவனது கண்களில் அநுதாப ணர்ச்சி பிரதிபலித்தது.

பா னு சப்தம்கேட்டுத் திரும்பிப்பார்த்த ாது அவனது நெஞ்சு என்னமோ செய் து! மறு கிலிஷம் தலையைக் கீழே போட் கொண்டு 'பூட்ஸை'க் கழற்றலானான்.

அவன் அங்கேயே நின்றுகொண் ருந்தாள்.

கழற்றிய ஆடை, சக்கடன் குடை, தண் ர்க் குப்பி, 'பிறவர்லேக்' எல்லாவற் றையும் அங்கேயே வைத்து விட்டு, வைபி ருந்த சவுக்கத்தை எடுத்துக் கொண்டு றை நோக்கிச் சென்றான்.

அப்படிப் போகும் பொழுது அவளை ஒரு றை திரும்பிப் பார்த்தான் என்று சொல்லவேண்டியதில்லை. அவளும் அவ யே பார்த்துக் கொண்டிருந்ததைக் கவ ித்ததும் அவனது நெஞ்சில் சொல் ாணாத இன்பவேதனை உண்டாயிற்று!

ஸ்நானம் செய்து விட்டு அவன் திரும்பி ும் பொழுதும் அவள் அங்கேயே புன் ிப்புடன் நின்று கொண்டிருந்தாள். ஒன் பேசாமல் காக்கி கிறுாரை அணிய ஆரம் தான் பாலு.

மணிப்பூர் மாதர்களிடம் அசட்டு சங்கோ இடையாது. பருஷர்களிடம் சுதந்திர கப் பழகவும் பேசவும் செய்வார்கள். த் தூய்மையிலும், புறத் தூய்மையிலும் ாத காட்டிற்கே அழகு செய்யக் கூடிய கள் மணிப்பூர் மாதர்கள். அவர்களது த்தில் இயற்கையான பன்முறுவல் எப் ாழுதும் தாண்டவமாடும். கள்ளக்கபடு ரியாத ஜனங்கள்.

அந்த யுவதி மெதுவாகப் பேச ஆரம்பித் ள். "இந்தக் குடை வெகு அழகாயிருக் து" என்று மணிப்புரி பாஷையில் லுவை நோக்கிக் கூறினாள். அவள் ிப்பிட்ட குடை பாலுவின் 'சக்கடன் டை' தான்.

பாலுவுக்கு அவள் பேசியதில் ஒரு அக்ஷ கூடப் புரியவில்லை. அவளைப் பார்த்து ருதிரு' என்று விழித்தான். அவ



பெண்ணின் தகப்பனார் (சம்பந்தியிடம்):- போன வருஷம் நீங்க கேட்ட அளவுக்கு வரதட்சிணை கொடுக்க முடியலை; இந் தாங்கோ; இப்போ பத்தாயிரத்தையும் பெரிய நோட்டாகவே கொண்டு வந் திருக்கேன். தாலிக்கு கட்டிப்புட் டேன்னு முகூர்த்தத்தை நடத்திவிடலாம்.

ளுக்கு இது ஒரு வேடிக்கையாயிருந்தது. தங்கள் பாஷை தெரியாத ஒருவனிடம் அவள் பேசுவது இதுதான் முதல் தடவை.

அவளுடைய சைகைகளுடன் கூடிய பேச்சிலிருந்து பாலுவுக்கு ஒருவாறு விஷ யம் புரிந்தது. தனது பிரிய 'சக்கடன் குடை'யை இந்த காரிமணி புகழ்கிறாள். ஆஹா!

"இந்தக் குடை உனக்குப் பிடித்திருந் தால் நீயே எடுத்துக் கொள்; எனக்கு வேண்டாம்" என்றான். அவனது பேச்சின் பாஷையைவிட ஜாடை பாஷையால்தான் அவளுக்கு அவன் கூறியது புரிந்தது.

"இல்லை, இல்லை. எவ்வளவோ தூரத்தி லிருந்து நீ இதைக் கொண்டு வருகிறாய். நீயேதான் இதைக் கொண்டு போக வேண்டும்."

பாலு விடவில்லை. ஒருவிதமாகக் குடையை அவளே எடுத்துக் கொள்ளும் படி செய்து விட்டான்.

மேற்கண்ட சம்பாஷணை ஜாடைகளின் உதவியால்தான் நடந்தது என்று கூற வேண்டியதில்லை.

"உன் பெயர் என்ன?" என்று கேட் டான் அவன். 'காம்' என்ற ஹிந்தி வார்த்தை அவர்கள் பாஷையிலும் அதே அர்த்தத்துடன் உபயோகப்படுவதால் பால கோபாலனுக்குக் கேள்வி புரிந்துவிட்டது.

"பாலகோபால்" என்றான்.

"உன் பெயர் என்ன?" என்று பதிலுக்குக் கேட்டான்.

"ஸனா தோங்பி" என்றாள் அவள்.

அவளுக்குப் பெயர் வைத்தவர்கள்மேல் பாலுவுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

"இது என்ன பெயர், 'ஸனா தோங்பி!' மங்கையர்க்கரசி என்று இவளுக்குப் பெயர் வைத்தால் எவ்வளவு பொருத்தமாயிருக்கும்!" என்று நினைத்தான்.

ஆனால் அந்தப் பிரதேசத்தில் சில நாட்களிருந்த பிறகு ஸனா தோங்பி என்றால் பொற்கொடி (ஸ்வர்ணவல்லி) என்று அர்த்தம் என்பது தெரிந்ததும் அவளது பெற்றோர்களை எப்படிப் புகழ்வதென்றே பாலுவுக்குத் தெரியவில்லை!

இதற்குள் வெளியில் சென்றிருந்த ஸனா தோங்பியின் தந்தை வந்து சேர்ந்தார். அவர் அப்பொழுது ராணுவத்திற்குக் காய்கறி 'ஸப்ளை' செய்யும் வேலை பார்த்து வந்தார்.

பாலகோபால் அவரைக் கண்டதும் ஒரு "நமஸ்தே" போட்டான். அவரும் பதிலுக்கு வந்தனம் செய்தார்.

சைனியத்தில் பழகியதால் அவருக்கு ஹிந்துஸ்தானி நன்கு பேச வந்தது. ஆகவே, பாலு அவரிடம் நன்கு வார்த்தையாட முடிந்தது.

அவருடன் பேசியதிலிருந்து ஸனா தோங்பி அவரது ஒரே புதல்வியென்றும், அவளுடைய தாயார் இறந்து சில வருடங்கள் ஆகிவிட்டன என்றும் தெரிய வந்தது. இப்பொழுது வீட்டு வேலையெல்லாம் ஸனா தோங்பிதான் செய்து வருகிறாள். அவளுக்கு இந்த வருஷம் விவாகம் செய்ய உத்தேசித்திருந்ததாகவும், இந்த யுத்த 'கெடுபிடி'யினால் அதை நிறைவேற்ற முடியவில்லையென்றும் பெரியவர் கூறினார்.

ஏனோ யுத்தத்தை மனமார வாழ்த்தினான் பாலு!

இவர்களைப் பேச விட்டுவிட்டு உள்ளே சென்றிருந்த ஸனா தோங்பி கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மறுபடியும் வெளியே வந்து காட்சியளித்தாள்.

இரண்டு தாம்பாளங்களில் பூரியும், ஒரு விதமான கூட்டும் கொண்டு வந்து இருவர் முன்பும் வைத்து, "சாப்பிடுங்கள்" என்று பாலுவைப் பார்த்துப் புன்னகையுடன் உபசாரம் செய்தாள்.

பாலு அவளை இப்பொழுது ஏற இறங்
நன்றாகப் பார்த்தான்.

அவளது நீண்ட அழகிய கண்களு
அவற்றில் தோன்றிய 'குறு குறு' நோ
கும், அவளது மலர்ந்த வதனமும் அவ
ஆகர்ஷித்தன.

"அங்கயற்கண்ணி என்ற பெயர் இ
ளுக்கே பொருந்தும்" என்று நினைத்தா

சிறிது நேரத்திற்கெல்லாம் இரண்
டம்ளர் பாலும் வந்து சேர்ந்தது.

சாப்பிட்டு முடிந்ததும் பாலு "போ
வருகிறேன்" என்று கை கூப்பினான்.

ஸனா தோங்பியின் தகப்பனார் பதிலுக்
ஒரு கும்பிடு போட்டார்.

ஸனா தோங்பி இரண்டு கைகளை
கூப்பிக்கொண்டு புன்னகையுடன் அவர்க
பாஷையில் ஏதோ கூறினாள்.

"உங்களை அடிக்கடி இங்கே வ
போகும்படி கேட்டுக் கொள்கிறாள்" என்
வியாக்யானம் செய்தார் அவள் தந்தை.

பாலுவின் கண்களில் ஆனந்தக் கண்
ரின் இரு துளிகள் தோன்றின.

பேசும் பொற்சித்திரம் போல் நின்
கொண்டிருந்த அவளது அழகைப் பருகி
வண்ணம், "இந்த இடத்தில் இருந்த
முடிந்த போதெல்லாம் அவசியம் வருவே
என்று சொல்லி விட்டுக் 'கேம்
நோக்கிக் கிளம்பினான்.

3

அன்று இரவு வெகு நேரம்வரை பா
வுக்குத் தூக்கமே வரவில்லை. புன்சி
புடன் அஞ்சலி செய்து கொண்டிரு
ஸனா தோங்பியின் தோற்றமே எப்பொ
தும் அவன் மனக்கண் முன் நின்றது.

"என்ன அழகான பெண்! இவளுக்
தமிழும் பேசத் தெரிந்தால் எவ்வளவு நன்
யிருக்கும்!"

ஆம்; பாலுவுக்கு இதுதான் பெ
கவலையாயிருந்தது. இவ்வளவு அழகா
பெண்ணுக்குத் தமிழும் பேசத் தெரி
விட்டால், —பின் வேறு என்ன குறை?
"பொன் மலர் நாற்றமுடைத்து!"

மறுநாள் காலை பாலு எழுந்திரு
பொழுது ஒரு பெரிய செய்தி அவனுக்
காத்துக் கொண்டிருந்தது.

மறு உத்தரவு வரும்வரை அவர்
'யூனிட்' பலேலிலேயே இருந்து ப

படுத்திக் கொள்ள வேண்டும் என்று டில்லியிலிருந்து வந்த உத்தரவுதான் அது.

இருபத்தொன்று மணி நேரத்திற்கு முன்பு அந்த உத்தரவு கிடைத்திருந்தால் அதற்குப் பொறுப்பாளிகளை பானு வாயாரத் திட்டி யிருப்பான்.

ஆனால் இப்பொழுதோ அவன் மகிழ்ச்சிக்கு எல்லையே யில்லை.

"லக்ஷா தோக்பியின் பிரார்த்தனை பலித்து விட்டது. நான் இனி அடிக்கடி அவளைப் பார்க்கலாம். மறுபடி நான் தமிழகம் செல்லும்போது அவளையும் என்னுடன் அழைத்துப் போக இறைவன் அருள் செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

அன்று முழுவதும் அவனால் லக்ஷா தோக்பியின் வீட்டிற்குப் போக முடியவில்லை. அந்தக் 'கேம்பி'லிருந்து ஒரு மைல் தூரத்திலிருந்த ஒரு பொட்டலில் அவன் 'யூனிட்'டைச் சேர்ந்த முந்நூற்றுச் சொச்சம் 'ஸாப்பர்'களும் போயிருக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது. அந்தப் பொட்டலைச் சுத்தம் செய்து கூடாரமடிக்கும் வேலையில் அன்று முழுவதும் கடந்து விட்டதால் தான் அவன் அவளை அன்று பார்க்க முடியாது போயிற்று.

டில்லியிலிருந்து வந்த உத்தரவின் முழு விவரம் இதுதான் :—

"அவன் 'யூனிட்'டைச் சேர்ந்த முந்நூறு 'ஸாப்பர்'களும் அங்கேயே இருந்து நல்ல ஆகாரம், தேகப் பயிற்சி, ஓய்வு இவற்றுடன் தேகத்தைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் எதிரியை அவனுடைய முறையிலேயே தோற்கடிக்கும் தந்திரத்தை நன்கு பயில வேண்டும்."

பர்மாவிலிருந்து வரும் வழியில் எல்லாம் அவர்களுக்கு மிகவும் உற்சாக மளித்த ஒரு எண்ணம் "இந்தியா சென்றதும் கொஞ்சம் லீவு கிடைக்கும்; தமிழ் நாட்டின் காற்றைச் சில நாள் பருகித் தெம்புடன் திரும்பி வரலாம்" என்பதுதான்.



ஆனால் இந்த உத்தரவு வந்ததும் அவர்கள் துக்கப்படவில்லை. அவர்கள் வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும்,—இன்பத்திற்கும், துன்பத்திற்கும், வெற்றிக்கும் தோல்விக்கும், வாழ்வுக்கும் சாவுக்கும் — தயாரா யிருக்கப் பயின்றவர்கள். வந்த உத்தரவை உற்சாகத் துடன் நிறைவேற்ற ஆரம்பித்தார்கள்.

* * *

மறு நாள் மாலையில் வேலை முடிந்ததும் பானு லக்ஷா தோக்பியின் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். லக்ஷா தோக்பி வாசலில், தூணருகில் நின்று கொண்டிருந்தாள். அவளது தந்தை திண்ணையில் உட்கார்ந்து ஏதோ கணக்குப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பானுவைக் கண்டதும் இருவரும் மகிழ்ச்சி யுடன் அவனை வரவேற்றார்கள்.

"நேற்று முழுவதும் 'ஏன் அவர் இன்னும் வரவில்லை' என்று லக்ஷாதோக்பி

கேட்டுக் கொண்டேயிருந்தான். உங்கள் மீது அவனுக்கு ரொம்பக் கோபம்" என்றார் அவன் தந்தை.

"இன்று நான் இங்கு வர முடிந்ததே தெய்வச் செயல்தான். இல்லாவிட்டால் இதற்குள் வெகு தூரம் சென்றிருப்பேன்" என்றான் பாலு.

பின்பு தங்களுக்குக் கிடைத்திருக்கும் உத்தரவை அவரிடம் விவரித்துக் கூறினான்.

"இன்னும் ஐந்தாறு மாதம் நான் இங்கே இருப்பது நிச்சயம். அப்புறம் கடவுள் சித்தம்" என்று முடித்தான்.

இந்தச் செய்தியை ஸங்கர தோங்பி கேட்டதும் ஏனோ அவனது மலர்ந்த முகம் இன்னும் மகிழ்ச்சியுடன் மலர்ந்தது! ஏனோ அவனது இயற்கையான புன்முறுவல் முழுச் சிரிப்பாகப் பரிணமித்தது! ஏனோ அவனது மனம் குளிர்ந்தது! ஏனோ அவனது கண்களில் புதிய ஒளி தோன்றிற்று!

"ராணுவத்திலிருப்பவர்களுக்குப் பாலை விட 'டீ' தான் பிடிக்குமென்று தேயிலை வாங்கி வரும்படி எச்சரித்து விட்டான். நேற்றே வாங்கி வைத்தேன். நீங்கள் வந்ததும் தயார் பண்ணித் தரவேணும் என்று காத்துக் கொண்டிருந்தான். ஆனால் நீங்கள் வராமல் ஏமாற்றி விட்டீர்கள்" என்று குற்றப் பத்திரிகை படித்தார் அவன் தந்தை.

"நாள் முழுவதும் நேற்று எனக்கு வேலை சரியாக இருந்தது. இல்லாவிட்டால் வந்திருக்க மாட்டேனா? இனி தினந்தோறும் அவசியம் வருகிறேன்" என்று பாலு நிலைமையைச் சமாளிக்க முயற்சித்தான்!

சிறிது நேரத்திற் கெல்லாம் ஸங்கர தோங்பி கொஞ்சம் பழமும் ஒரு டம்ளர் தேநீரும் கொண்டுவந்து அவன் கையில் அன்புடன் கொடுத்தான்.

அந்தமாதிரி பழம் அதுவரை தான் சாப்பிட்டதேயில்லை என்ற முடிவுக்கு அவன் வந்தான்! அவன் கொடுத்த தேநீர் அவனுக்கு அமிர்தமாயிருந்தது.

"இன்று இரவு இங்கேதான் சாப்பிட்டு விட்டுப் போகவேண்டும்" என்று ஸங்கர தோங்பி பிடிவாதம் பிடித்தான்.

அன்று இரவு அவன் சமையல் செய்திருந்தான். சாம்பாரையும் ரசத்தையும் அவனிடம் எதிர்பார்க்க முடியாதல்லவா? எப்படியும் பாலு "சமையல் கன ஜோர்" என்று ஸர்டிபிகேட் கொடுத்து விட்டான்.

சாப்பிட்டுச் சிறிது நேரமானதும் ஸங்கர தோங்பி பாட ஆரம்பித்தான்.

முதலில் சில மணிப்புரி பாட்டுக்கள் பாடினான். அவை காதுக்கு இனிமையாயிருந்தன. ஆனால் அர்த்தம் ஒன்றும் புரியாமையால் பாலுவால் அதை அவ்வளவு ரசிக்க முடியவில்லை.

பின்பு பாலுவைப் பார்த்து, "வங்காளி தெரியுமா?" என்று வங்க பாஷையில் கேட்டான்.

மணிப்புரி பாஷை வங்க எழுத்துக்களில் தான் எழுதப்படுகிறதென்றும், மணிப்புரில் பெரும்பாலோருக்கு வங்காளி நன்கு தெரியுமென்றும் அவன் தந்தை பாலுவிடம் விவரித்துக் கூறினார்.

ரங்கூனில் தனக்கு இருந்த ஓய்வு நேரத்தில் ஒரு வங்க நண்பனின் உதவியால் கொஞ்சம் வங்காளி கற்றிருந்தான் பாலு. அது எவ்வளவு நல்ல சமயத்தில் உதவுகிறது! இனி இந்தப் பொற்கொடியிடம் வங்காளியிலேயே வார்த்தையாட முடியும்!

"கொஞ்சம் சுமாராகத் தெரியும்!" என்று பதிலளித்தான்.

உடனே கணீரென்ற குரலில் பங்கஜ் மல்லிக்கின் ஒரு அழகிய வங்காளிப் பாட்டை அவன் பாட ஆரம்பித்தான்.

"அன்றலர்ந்த பங்கஜங்களால் தொடுக்கப் பட்ட இந்தப் பூ மாலையை இன்று உனக்கு நான் சூட்டுகிறேன்" என்பது அந்தப் பாட்டின் முதல் அடியின் பொருள்.

அவன் அதை அழகாகப் பாடினான்.

"நாதம் தானது நாரதன் வீணையோ, நம்பிரான் கண்ணன் வேய்ங் குழல் இன்பமோ!" எனப் பாலு வியந்தான்.

"தமிழகம் சென்றதும் இவனுக்குக் கர்நாடக ஸங்கீதம் கற்பிக்க வேண்டும்; அது தான் முதல் வேலை!"

திடீரென்று பாலுவின் எண்ணம் இன்னொரு பக்கம் சென்றது.

"இந்தப் பாட்டை இவன் இப்பொழுது பாடக் காரணமென்ன? கேள்வி என்ன வேண்டியிருக்கிறது! இந்தப் பாட்டை இவன் வேண்டுமென்று பாடுவதிலிருந்தே தெரியவில்லையா!"

அவனது கற்பனா சக்தி வெகு துரிதமாக வேலை செய்தது. இன்பக் கனவுகள் கண்டு கொண்டேயிருந்தவன் அவனது கானம் நின்றதும்தான் சுய உணர்வை அடைந்தான்!

(அடுத்த இதழில் முடியும்)



ஸி. ஐ. டி. கரடி வசித்துவந்த காட்டில், பெரிய திருட்டு நாய் ஒன்றிருந்தது. ஸி. ஐ. டி. கரடியார் பார்ப்பதற்கு எவ்வளவு பயங்கரத் தோற்றத்தை அளித்ததோ அதைவிடப் பத்து மடங்கு தோற்றம் அளித்தது திருட்டு நாய். திருட்டு நாய் திருடுவதில் மிகவும் பிரக்யாதி பெற்றது. திருட்டு நாய் இரவிலே திருடுவதில்லை. பட்டப் பகலிலேயேதான் திருடுவது வழக்கம். ஆனால் பிறருக்குத் தெரியாமல் திருடுவதில் அதைவிடக் கெட்டிக்கார நாய் வேறு இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஆனால் மேற்படி. திருட்டு நாய் திருடும் பொழுது ஏதாவது ஒரு பிராணி அதைப் பார்த்துக் கூறுக்கிட ஆரம்பித்தால் அவ்வளவுதான். திருட்டு நாய் அந்தப் பிராணியை விடாமல் துரத்தித் துன்பம் உண்டாக்கும். அதனுல் திருட்டு நாயைக் காட்டிலுள்ள மற்றப் பிராணிகள் பார்க்கும்படி நேரிட்டால் வெளியே வராமல் உள்ளேயே பதுங்கி விடும்.

ஒரு நாள் ஸி. ஐ. டி. கரடியார் ஒரு கூடை நிறைய பிஸ்கோத்துகளை எடுத்துக் கொண்டு வெகு வேகமாகக் காட்டின் வழியே நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது ஒரு மரத்தினருகில் பெரிய விளம்பரம் ஒன்று ஒட்ட
பட்டிருந்தது. விளம்பரம் புதியதா
இருக்கவே, கையில் ஸி. ஐ. டி. கர
யார் கூடையுடன் நின்று கொண்டே
மெதுவாக அந்த விளம்பரத்தை
படித்தது. அதில் கீழ் வருமா
எழுதியிருந்தது :—

விளம்பரம்


**இக்காட்டில் வெகு நாட்களாக ஒ
கொழுத்த நாய் உலாவி வருகிறது
அது பல திருட்டுக் கேஸ்களில் சம்ப
தப்பட்டிருக்கிறது. எவ்வளவோ முய
சிகள் செய்தும் அதைப் பிடிக்க முடி
வில்லை. அது பிடிபடாமல் காட்டி
உலாவி வருவதே காட்டிலுள்ள பிரா
களுக்குத் துன்பமாக இருப்பதா
அதை யார் பிடித்துத் தருகிறார்களோ
அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் இனாம்.**

இப்படிக்கு,

சிங்கராஜ

அந்த விளம்பரத்தை ஸி. ஐ.
கரடியார் ஒரு முறை படித்தது. இ
முறை படித்தது. மூன்றும் முறைய
படித்தது. அடாடா! என்னைத் தவி
வேறு யாரால் அந்தத் திருட்டு நாயை
பிடிக்க முடியும்? என் மோப்பத்திலு
நூறு காதத்திற்கு அப்பால் அ
நாய் வந்தால்கூடப் பிடித்து வி
வேனே? அதுவுமல்லாமல் என்னை
தானே சிங்க ராஜா இந்தத் திருட
நாயைக் கண்டு பிடிக்க 'ஸ்பெஷலா
நியமித்திருக்கிறார். எனக்குத்தா
இந்த வெகுமானம் ரூபாய் ஆயிரமு
கிடைக்கப் போகிறது" என்
சந்தோஷம் கொண்டது.

ஸி. ஐ. டி. கரடி நேராக சி
ராஜாவினிடம் சென்றது. சி
ராஜா ஸி. ஐ. டி. கரடியை
வேற்று "கரடியாரே! இந்தத் திருட



நாயைக் கண்டு பிடிக்க உம்மைத்தான் நம்பி இருக்கிறேன். விளம்பரத்தைப் பார்த்தீர்களா?" என்று கேட்டது.

"அரசனே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். எவ்வளவு தூரத்தில் அந்தத் திருட்டு நாய் இருந்தாலும் என் மோப்பத்தின் உதவியால் அதைக் கண்டு பிடித்து உமது முன்னிலையில் நிறுத்துவேன். அந்த நாய் என்னை மட்டும் ஏமாற்ற முடியாது" என்று சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த கூடையைப் பார்த்தது. பார்த்தவுடன் ஸி. ஐ. டி. கரடிக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒன்றும் தோன்றாமல் இங்கும் அங்குமாகப் பார்த்தது. அதைப் பார்த்த சிங்கம் "என்ன சமாச்சாரம்? ஏன் இப்படியும் அப்படியுமாகப் பார்க்கின்றீர்கள்?" என்று கேட்டது. அதற்கு ஸி. ஐ. டி. கரடி மிகவும் வருத்தத்துடன், "ஒன்று மில்லை; இன்று பொங்கல் தினத்தை உத்தேசித்துப் புதிதாகக் கிடைத்த பிஸ்கோத்துக்களைத் தங்களுடைய குழந்தைகளுக்காக இக் கூடை நிறையக் கொண்டு வந்தேன். ஆனால் இப்பொழுது கூடை காலியாக இருக்கிறது. அதனால்தான் விழிக்கிறேன்" என்றது. அதைக் கேட்ட சிங்க ராஜாவும் சற்று நேரம் விழித்தது.

அப்பொழுது அங்கு பெரு மூச்சு விட்டுக் கொண்டு ஓடிவந்த சிறிய ஸி. ஐ. டி. நரி 'என்ன கரடியாரே! விழிக்கிறீர்கள்? உங்கள் கூடையிலிருந்த பிஸ்கோத்துக்கள் காணவில்லை என்றுதானே?" என்று கேட்டது. அதற்குப் பெரிய ஸி. ஐ. டி. கரடியார் "ஆமாம்; என்ன சமாசாரம் சொல்" என்று ஆவலுடன் கேட்டது. அதற்கு நரி, "கரடியாரே! உம்முடன் பின் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும் பொழுது நீங்கள் சற்று நேரம் புதிதாக ஒட்டியிருந்த விளம்பரத்தை ஸ்வாரஸ்யமாக வாசித்துக் கொண்டிருந்தீர்கள். அப்பொழுது அந்தத் திருட்டு நாய் உங்கள் சமீபத்தில் வந்து கொண்டிருந்தது. நான் பயந்து ஓரிடத்தில் பதுங்கினேன். அந்தத் திருட்டு நாய் நீங்கள் படித்துக் கொண்டிருக்கும் பொழுது தங்கள் கூடையிலிருந்த பிஸ்கோத்தை 'லபக் லபக்' என்று தின்றுவிட்டு ஓடினதைப் பார்த்தேன். மோப்பத்தினால் யாரையும் கண்டு பிடிக்கும் தங்களையே ஏமாற்றிய நாய் என்னை என்ன பண்ணுமோ என்று பயந்து நாய் மறைந்த உடனே நேராக இங்கு ஓடிவந்தேன்" என்றது.

இதைக் கேட்ட கரடியின் முகத்தில் அசடு வழிந்தது. அப்புறம் "தன் காட்டில் சின்ன ஸி. ஐ. டி. யும் வேண்டாம். பெரிய ஸி. ஐ. டி. யும் வேண்டாம்" என்று சிங்க ராஜா அந்தக் காட்டிலுள்ள ஸி. ஐ. டி. இலாகாவையே அடியோடு ஒழித்துவிட்டது.



சிங்கம் (க்ஷவரக் குரங்கினிடம்):—பார்த்து வெட்டு; மீசையையும் சேர்த்து வெட்டிவிடப் போகிறாய்!

மீளாத அடிமை

பகீரதன்

ரெங்கனாதன் பெரிய செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர். கஷ்டம் என்பது தெரியாமலே வளர்ந்து வந்தார். சிறு வயதிலேயே சுதந்திர நாடுகளான பிரான்ஸ் முதலிய தேசங்களுக்குத் தன் தந்தையுடன் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். அதற்குப் பிறகு சில வருஷங்களுக்கெல்லாம் தன் தந்தையைப் பிரிந்தார்.

தந்தையைப் பிரிந்த ரெங்கனாதனுக்கு உலகமே வெறிச் சென்றிருந்தது. தான் ஏதோ தனி மனிதன் ஆகிவிட்டது போன்ற ஒரு உணர்ச்சி அவர் மனதைப் புண்படுத்திக் கொண்டு வந்தது.

இது வரையில் உல்லாசமாக ஓடி ஆடித் திரிந்து, தனக்கு வேண்டிய காரியங்களைச் சுதந்திரத்துடன் செய்து வந்த ரெங்கனாதனை இப்பொழுது வீட்டில் எல்லாரும் கண்டிக்க ஆரம்பித்து விட்டார்கள். எங்கு சென்றாலும் தன்னுடைய சுதந்திரம் பறி போவதைக் கண்ட அவருடைய இளம் உள்ளம் இதனால் இன்னும் வேதனை அடைந்தது.

வீட்டில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ மலைபோல் குவிந்து கிடந்தன. வியாபாரத்தையும் வீட்டுக் காரியங்களையும் கவனிப்பதற்கு பி. ஏ. வரையில் படிப்பானேன் என்று நினைத்து ரெங்கனாதன் சும்மா இருந்து விட்டார்.

ரெங்கனாதன் அந்த வீட்டில் இருந்து எப்படியாவது விடுதலை பெற வேண்டும் என்று நினைத்தார். தூரத்துப் பச்சை கண்ணுக்கு மட்டும்தான் அழகு என்பது அனுபவித்தால் தானே தெரியும்? எப்படியோ சால்ட்-இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தில் அமர்ந்தார்.


எந்தக் காரியமும் ஆரம்பித்த புதிதில் சந்தோஷமாகத்தானே இருக்கும்? அது போலவே அவருடைய உத்தியோகமும் ஆரம்பத்தில் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஆனால் அடிமை உத்தியோகத்தில் எத்தனை நாளைக்குச் சந்தோஷத்தை எதிர் பார்க்க முடியும்? வரவரத் தன் வேலையில் ஏதோ காரணம் தெரியாத வெறுப்பு ஏற்பட்டது அவருக்கு.

“வீட்டில் அடிமைத்தனம் வேண்டாம் என்று இந்த வேலைக்கு வந்தேன். பார்க்கப் போனால் வீட்டில் நான் அடிமையே இல்லை. நான் படித்த படிப்பின் பலன்தான் அப்படி நினைத்தேன். ஆகா! என்னுடைய வியாபாரத்தை நானே நேரில் கவனித்திருந்தால், எவ்வளவோ சுதந்திரமாய் இருந்திருக்கலாமே?” என்று நினைத்து அவர் மிகவும் மனம் கலங்கினார்.

இந்த மாதிரி எல்லாம் அவர் மனம் கலங்கிக் கொண்டிருந்த சமயத்தில்தான் அவருடைய மேலதிகாரி அவரைக் கடுமையாகக் கோபித்துக் கொண்டு விட்டார்.

“மேலதிகாரியாயிருந்தால் என்ன? நான் அவருக்கு வீடு தேடிக் கொடுக்க வேண்டுமென்று சட்டமா? அதைக் காரணமாக வைத்துக் கொண்டு என் வேலையில் ஏதோ தவறு இருப்பது போலக் கோபித்துக் கொண்டால்?” என்று நினைக்க நினைக்க அவர் இருதயம் அப்படியே நொறுங்கி விடும்போலிருந்தது.

அதே வேதனையுடன் வந்த ரெங்கனாதன் தான் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல்



“ஐயையோ! கண்டிராக்டர் குண்டு மணியா அது? [illegible] இப்படி இளைத்துப்போய்விட்டாரே! தேசப்பிரயாணம் செய்து வந்ததின் பலனோ?”

“அதெல்லாம் ஒன்றுமில்லை. பேப்பரிலே ஏதோ நோட்டு விஷயமாக தேடி வந்தாரோ? அதனுடைய பலன்தான்!”


அவசரமாகத் தம் அறைக்குள் சென்று தம்முடைய வேலைக்கு ஒரு ராஜிநாமாக் கடிதத்தை எழுதி அனுப்பி விட்டு, "அப்பாடா! இந்த அடிமை உத்யோகத்துக்குத் தலையை முழுகியாச்சு" என்று சொல்லி அருகில் இருந்த நாற்காலியில் சாய்ந்தார். அவருடைய முகத்திலே அலாதியான சந்தோஷக் களை கிளம்பி யிருந்தது.

ரெங்கநாதன் இப்பொழுது சாதாரண சால்ட் இன்ஸ்பெக்டர் அல்ல. ஒரு சுதந்திர புருஷர்! மேல்நாட்டு முறையை அனுசரித்துத் தம்முடைய வியாபாரத்தைத் தாமே கவனித்து வந்ததின் மூலம் லட்ச லட்சமாய்ப் பணத்தைக் குவித்திருக்கிறார்.

உண்மையிலேயே இப்பொழுது சுதந்திரமாக வாழ்ந்து வருகிறார். இருந்தாலும் அவர் மனதிலே ஏதோ தம் வாழ்க்கையின் மீது ஒரு இனந் தெரியாத வெறுப்பு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

இதை அறிந்த அவருடைய நண்பர்களும் உறவினர்களும் அவருக்குக் கலியாண ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தனர்.

நோட்டு விஷயம்!



"ஏன் ஸார்! சமீபத்திலே பத்திரிகை ஏதாவது படித்தீர்களோ?"

"இல்லையே: பத்திரிகையைத்தான் நான் படிக்கிறதே இல்லையென்று உமக்குத் தெரியுமே. அது சரி: எப்போ இந்தப் பக்கம் அபூர்வமா யிருக்கே?"

"ஒன்றுமில்லை; ரொம்ப நாளாய் நான் தங்களுக்குத் தரவேண்டிய ஐயாயிரம் ரூபாயையும் கொடுத்து விடலாம் என்று தான் வந்திருக்கிறேன்!"

எல்லா வகையிலும் சிறந்த ரெங்கநாதனுக்குப் பெண் கொடுப்பவர்களுக்கா பஞ்சம்? காலக்கிரமத்தில் கல்யாணம் நடந்தேறியது என்று சொல்ல வேண்டியதில்லை.

இப்பொழுது தாம் முற்றிலும் விடுதலை அடைந்து விட்டதுபோல ஒரு புது உணர்ச்சியுடன் தம் மண வாழ்க்கையை உல்லாசமாக நடத்த ஆரம்பித்தார்.

அன்று தம் மனைவிக்கு ஒரு வைர அட்டிகை வாங்கிக்கொண்டு உத்சாகத்துடன் வீட்டிற்கு வந்து, 'பாப்பா!' என்று கூப்பிட்டுக் கொண்டே கதவைத் தட்டினார்.

"இதோ வந்து விட்டேன்," என்று சொல்லிக்கொண்டே அவருடைய அருமை மனைவி அனஸூயா ஓடி வந்தாள்.

அனஸூயாவைத்தான் "பாப்பா!" என்று பாசத்துடன் கூப்பிடுவார் ரெங்கநாதன்.

அனஸூயா வயதில்தான் பெரியவளே ஒழிய குணத்தில் பாப்பாதான்! சின்னஞ்சிறு பாப்பாவைப்போல்தான் அவளுடைய உள்ளமும். கள்ளங் கபடம் இல்லாத வெள்ளை மனசு படைத்தவள்.

என்றுமே இல்லாத உத்சாகத்துடன் வந்திருந்த தன் கணவனைக் கண்டதும் அவள் முகம் 'சூரியனைக் கண்ட தாமரை மலர்' போல மலர்ந்து விட்டது.

"இதோ பார்! இன்று உனக்கு பேஷான அட்டிகை ஒன்று வாங்கி வந்திருக்கிறேன்" என்று சொல்லி அதை அனஸூயாவின் கையில் கொடுத்தார்.

அனஸூயா அதை வாங்கிக் கழுத்தில் போட்டுக் கொண்டு "நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டாள்.

ரெங்கநாதன் பதில் சொல்லாமல் புன்சிரிப்புடன் மௌனமாக இருந்தார்.

"ஏன்? நன்றாக இல்லையா?"

"இதென்ன, கேள்வி பாப்பா? 'ஜம்'மென்றிருக்கிறாய்!"

"அதற்கு ஏன் இப்படி மௌனமாக இருக்கிறீர்கள்?"

"நான் சுதந்திரமாக வாழ விரும்பி அடிமை உத்தியோகத்தை விட்டு விட்டு வியாபாரத்தில் இறங்கினேன். பெயரும் புகழும் செல்வமும் அடைந்தேன். ஆனால்,...அனஸூயா உன்னிடம் மட்டும் நான் மீளாத அடிமையாகி விட்டேன்" என்று சொல்லி அனஸூயாவின் தலையை அன்போடு தடவினார்.

துரியோதனன் முடிவு

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

கர்ணன் யுத்தத்தில் கொல்லப்பட்
த அறிந்ததும் துரியோதனன் சோகத்
மூழ்கினான். துரியோதனனுடைய
மையைப் பார்த்துப் பரிதாபப்பட்டு
பர் சொல்லலானார்:

ராஜ்யத்தில் ஆசை வைத்து அதற்
ச் செய்யவேண்டிய காரியங்களின்
றும் பாரத்தை யார் மேல் வைத்
மோ அவர்கள் அதைச் சந்தோஷ
வே வகித்தார்கள். தங்கள் உயிர்
த் தியாகம் செய்து மேலுலகை ஏகி
விட்டார்கள். அரசனே! இப்போது
செய்யவேண்டியது ஒன்றே. பாண்
ர்களோடு சமாதானம் செய்து
ள்வதே உன்னுடைய கடமை. இனிப்
ராட்டம் வேண்டாம்" என்றார்.

ராசையான நிலையிலிருந்தாலும் துரி
தனனுக்கு இந்த யோசனை பிடிக்க
லை.

பேடித் தன்மைக்கு இது சமயமன்று.
ர் செய்வதே என் கடமை. நண்பர்
ம் பந்துக்களும் இறந்துவிட்ட பின்
உயிரை நான் காப்பாற்றிக்கொண்டு
பித்துக் கொள்வதா? அப்படிச்
ாதேனானால் உலகம் என்னை நிச்சய
இகழும். இகழப்பட்டும் பிழைப்பது
சுகத்தை அனுபவிக்க? சகோதரர்
ம் பந்துக்களும் மாண்டுவிட்ட பின்
யத்தைச் சமாதானத்தின் பேரில்
பாற்றிக் கொண்டுதான் என்ன அனு
க்கப் போகிறேன்?"

இவ்வாறு துரியோதனன் சொன்ன
ப் படை வீரர்களனைவரும் பாராட்டி
கள். துரியோதனன் சொல்லுவது சரி
ன வார்த்தை என்று ஆமோதித்
கள். அதன் மேல் எல்லாரும்
சித்துச் சல்யனைச் சேனாபதியாக
மித்தார்கள். சல்யன் மகா பலசாலி.
ன் பராக்கிரமம் உயிரிழந்த தலைவர்க
ளுக் குறைந்ததல்ல. அவன் தலைமை
ழ் பலத்த யுத்தம் மறுபடியும்
ங்கிற்று.

ாண்டவர்கள் பக்ஷத்தில் இப்போது
ஷ்டிரன் முழுபாரமும் வகித்தான்.
னே நேரில் சல்யனைத் தாக்கினான்.
வரையில் சாந்தமே உருக்கொண்ட
க விளங்கிய யுதிஷ்டிரன் இப்போது
ங்கொண்டு கோர யுத்தம் நடத்தியது
ப்பாக இருந்தது. வெகு நேரம் சம

யுத்தம் நடந்தபின் யுதிஷ்டிரன் சல்யன் மேல் சக்தி ஆயுதத்தை வீசினான். திருவிழாவில் உயர்த்திய துவஜஸ்தம்பம் விழுவதைப்போல் சல்யன் உயிரிழந்து கீழே விழுந்தான்.

சல்யனும் இறந்துபோனான், இனி ஒருவித பலமும் இல்லையென்று கௌரவப் படை மனக் கலக்கம் அடைந்தது. ஆயினும், எஞ்சிய திருதராஷ்டிர புத்திரர்கள் ஒன்று சேர்ந்து பீமனை நாலா பக்கத்திலிருந்தும் தாக்கினார்கள். அவ்வளவு பேரையும் பீமன் கொன்றான். பதின்மூன்று வருஷம் கோபத்தால் உள்ளம் வெந்த வாயு புத்திரன் இன்றுதான் வாழ்க்கைப் பயனை அடைந்தேன் என்று எண்ணி மகிழ்ச்சியடைந்தான்.

* * *

அதன்பின் சகுனி சகதேவனைத் தாக்கினான். "மூடனே! நீ செய்த பாபத்தின் பலனை இப்போது அடைவாய்" என்று சொல்லிச் சகுனியின் தலை அறுபட்டுக் கீழே விழும்படி கூரிய எஃகு அம்பு ஒன்றை சகதேவன் குறி வைத்து எய்தான். கௌரவர்களின் பாபங்களுக்கெல்லாம் மூலமாயிருந்த தலையானது அறுபட்டு விழுந்தது என்கிறார் முனிவர்.

* * *

துரியோதனன் ஒருவன் தவிர எல்லாரும் மாண்டார்கள். சேனையின்றி, ரதமின்றி, பரிதாப நிலையிலிருந்த அந்த வீரன் கதையை எடுத்துக் கொண்டு பாதசாரியாக ஒரு தண்ணீர் மடுவை நோக்கிச் சென்றான்.

"மகா பிராக்ஞரான விதுரர் என்ன நடக்கும் என்பதை முந்தியே கண்டு சொன்னார்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டு அந்த மடுவில் இறங்கினான்.

காலம் தவறிய பிறகு அறிவு தோன்றினால் ஒரு பயனும் இல்லை. செய்த கருமங்களின் வினைவை அனுபவித்தே தீர வேண்டும்.

துரியோதனனைத் துரத்திக் கொண்டு அங்கே யுதிஷ்டிரனும் அவன் தம்பிகளும் வந்து சேர்ந்தார்கள்.

"துரியோதனா! குலத்தையும் குடும்பத்தையும் நாசம் செய்து விட்டுத் தண்ணீரில் மறைந்து ஒளிந்துகொண்டு உயிர்

தப்பப் பார்க்கிருயா? உன்னுடைய மானமும் தன் மதிப்பும் எங்கே போயிற்று? வெளியே வந்து யுத்தம் செய். க்ஷத்திரியனுய்ப் பிறந்தாய். யுத்தத்தினின்று தப்பிப் பிழைக்கப் பார்க்காதே'' என்ருன் யுதிஷ்டிரன். அப்போது துரியோதனன் மிகவும் வருத்தப்பட்டு ''என் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கல்ல நான் இவ்விடம் வந்தது. பயத்தால் நான் இவ்விடம் வந்தேன் என்று எண்ணுநீர்கள். என் உடலின் சிரமத்தைத் தீர்த்துக் கொள்ளத்தான் வந்தேன். குளிர்ந்த தண்ணீரில் இறங்கி நிற்கிறேன். ஓ! யுதிஷ்டிரனே! எனக்குப் பயமும் இல்லை. உயிரைப் பற்றி ஆசையும் இல்லை. ஆயினும் இப்போது யுத்தத்தில் மனம் செல்லவில்லை. என்னைச் சார்ந்தவர்கள் அனைவரும் மாண்டார்கள். ராஜ்ய பதவியில் எனக்கிருந்த விருப்பம் தீர்ந்தது. இந்த உலகம் உனதே. கவலையின்றி நீயே அனுபவிப்பாயாக'' என்ருன்.

''ஊசி முனை நிலமும் இல்லையென்று அந்த நாளில் நீ சொன்னுயல்லவா? சமாதானத்தை விரும்பி நாங்கள் கெஞ்சிக் கேட்ட காலத்தில் இல்லையென்ற நீ இப்போது ஏன் எல்லாம் எடுத்துக்கொள் என்கிருய்? நீ செய்த பாபங்களை யெல்லாம் எடுத்துச் சொல்ல வேண்டுமா? நீ எங்களுக்கு இழைத்த தீங்குகளும் திரௌபதிக்கு இழைத்த அவமானமும் உன் உயிரைக் கொண்டுதான் தீரும்'' என்ருன் தருமபுத்திரன்.

சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குச் சொல்லுகிருன்: ''இந்த கொடிய வார்த்தைகளை யுதிஷ்டிரன் வாயால் கேட்டதும் உன் மகன் துரியோதனன் கதாயுதத்தைத் தூக்கிக் கொண்டு தண்ணீரில் எழுந்து நின்ருன்.''

எழுந்து நின்ற துரியோதனன், ''வாருங்கள். ஒருவர் பின் ஒருவராக வாருங்கள். நான் தனியாயிருக்கிறேன். நீங்கள் ஐவரும் ஒன்று கூடி என்னைத் தாக்குவது நிய... மன்று. என் தேகத்துக்குக் கவ... மில்லை. ஓய்ந்து போயிருக்கிறே... உடம்பில் பல இடங்களில் காயமடை... யிருக்கிறேன்'' என்ருன்.

இதற்கு யுதிஷ்டிரன் ''ஒருவனைப் ப... சேர்ந்து எதிர்ப்பது தவருனல் அபிம... எவ்வாறு இறந்தான்? உன் சம்ம... பெற்றல்லவோ பலரும் சேர்ந்து அ... அநியாயமாகக் கொன்ருர்கள்? த... னுக்குக் கஷ்டம் நேரிட்டபோது ... யாரும் தரும சாஸ்திரம் எடுத்து ... வார்கள். வெளியே வந்து கவசம் தரி... கொள். எங்களுக்குள் யாரையேனும் ... வனைத் தேர்ந்து எடுத்துக் கொ... அவனுடன் யுத்தம் செய். இறந்து ச... கம் செல்; அல்லது வென்று அரச... இருப்பாய்'' என்ருன்.

அதன்மேல் பீமனுக்கும் துரியோ... னுக்கும் யுத்தம் நடந்தது. அவர்களுடை... இரு கதாயுதங்களும் ஒன்றை யொ...



ாக்கியபோது நெருப்புப் பொறிகள்
றந்தன. வெகு நேரம் யுத்தம் நடந்தது.

அந்த இருவரில் யார் வெல்
ார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்
வர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்.
ரியோதனனுடைய துடைகளைப்
ளந்து பீமன் தன் பிரதிஜ்ஞையைப்
ர்த்தி செய்வான் என்று கண்ணன்
றியது பீமனுக்கும் கேட்டது. சிம்
ம் பாய்வதுபோல பீமன் துரியோ
னன்மேல் பாய்ந்தான். பாய்ந்து
தையை ஓங்கி துரியோதனனுடைய
டையின் மேல் பலமாக அடித்தான்.
ரியோதனன் வீழ்ந்தான். வீழ்ந்து
டந்த துரியோதனனுடைய தலையைக்
லால் துவைத்து பீமன் கூத்தாடினான்.
ப்போது கண்ணன் "பீமனே,
ாதும். உன் கடனைத் தீர்த்தாய்.
ரியோதனன் அரசனாகப் பிறந்த
ர். நம்முடைய குலத்தவன். அவன்
லையைக் காலால் உதைக்கலாகாது.
கிரத்தில் பாபிஷ்டனுடைய
ிர் உடலை விட்டுப் பிரி
ம். பாண்டு குமாரர்களே!
ரியோதனனும் அவன் சகாக்
ளும் இறந்தார்கள். இனித்
ாமதம் ஏன்? தேர்
ுங்கள்" என்றான்.

அச்சமயம் கீழே காலு
டந்து கிடந்த துரியோதனன்
த்தில் கோபமும் வெறுப்
தோன்றின. கிருஷ்ண
ப் பார்த்து "தரும முறை
போர் புரிந்த அநேக வீரர்
ரப் பல மோசங்கள் செய்து
ால்லுவித்தாய். உனக்கு
ட்கம் சிறிதும் இல்லையா?
னனோடாவது பீஷ்மரோ
வது துரோணரோடாவது
ர்மையான முறையில் நீ
ர் புரிந்திருந்தால் ஒரு
றும் நீ வெற்றி அடைக்
க்க மாட்டாய்" என்றான்.


யிர் உடலை விட்டு நீங்கும்
யத்திலும் இவ்வாறு
ன்ன துரியோதனனைப்
த்துக் கிருஷ்ணன் "துரி
தனா! வீண் பேச்சு
கிறாய். ஆசையினாலும்
பலம் பெற்ற கர்வத்
ும் நீ செய்த பாபங்க
ுக் கணக்கில்லை. அதன்
ளை அநுபவிக்கிறாய்"
று சொன்னான்.

துரியோதனன் "க்ஷத்திரியர்கள் எவ்வாறு இறக்க விரும்புகிறார்களோ அந்த மரணத்தை நான் அடைந்தேன். என்னை விடப் பாக்கியவான் யார்? என் நண்பர்களுடனும் என்னைத் தொடர்ந்தவர்களுடனும் நான் சுவர்க்கம் போகிறேன். இகழப்பட்டவனாக நீ உயிருடன் இரு. கீழே விழுந்து கிடக்கும் என் தலைமேல் பீமன் தன் காலை வைத்து உதைத்ததால் எனக்குத் துயரம் இல்லை. காக்கைகளும் கழுகுகளும் என் தலைமேல் தம் கால்களை இன்னும் சில நிமிஷங்களுக்குள் வைக்கப் போகின்றன வல்லவா?" என்றான்.

இவ்விதம் துரியோதனன் வீரனுக்குத் தகுந்த பேச்சுகள் பேசுகையில் ஆகாயத்திலிருந்து புஷ்ப வருஷம் வருஷித்தது என்கிறார் முனிவர்.

லோபத்தினால் துரியோதனன் முதலில் அதருமத்தில் இறங்கினான். அதன் பலனாக விளைந்த கோபத்தினால் இரு பக்கத்திலும் பல அதருமங்கள் தோன்றின.

எங்கும் 'க்யூ' வரிசை



சினிமாவில் டிக்கட் இல்லை என்ற போர்டு போட்டவுடன் சடக்கென்று எல்லோரும் திரும்பி ஓடிப்போய் பஸ் ஸ்டாண்டில் 'க்யூ'வில் நிற்கிறார்கள்.

அந்தச் சித்திரம்

எஸ். வி. எஸ்.

எங்கள் வீட்டில் அவர் ஒரு அறை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வசித்து வந்தார். அவருக்கு ஏதோ ஒரு கம்பெனியில் வேலை, காலை 9-30 மணிக்குப் போவார். மாலை 5-30 மணிக்கெல்லாம் திரும்பி விடுவார். மிச்சமிருக்கும் நேரம் என் தம்பியுடன் தமாஷாகப் பேசிக் கொண்டும் எழுதிக் கொண்டும் பொழுது போக்குவார்.

எழுத்து என்றால் என்ன என்று நினைக்கிறீர்கள்? தெருவில் ஒரு நாய் ஒற்றைக் காலைத் தூக்கிக் கொண்டு ஓடுவதை "அம்பி, அம்பி! அந்த நாயைப் பார். எப்படி ஓடுகிறது பார்த்தாயா? சரி. இனிமேல் கொஞ்சம் கண்ணை மூடிக்கோ" என்பார்.

அம்பி கண்ணை மூடிக் கொள்வதுபோல் பாசாங்கு பண்ணுவான். அதற்குள் இரண்டு கோடு இப்படியும் அப்படியும் இழுப்பார். தெருவில் போகிற நாய் ஸ்லேட்டில் வந்து விடும். அம்பிக்குச் சந்தோஷம் தாங்காது. 'அக்கா, அக்கா! இதைப் பார், அந்த மாமா ஒரு நிமிஷத்திலே இப்படியும் அப்படியும் இழுத்தார். வந்துடுத்து பாரேன் அந்த நாய்" என்பான்.

இப்படி ஒரு நாளைக்கு எத்தனையோ படங்கள் வரைவார். அதைப் பார்த்து நானும் வரையப் பார்ப்பேன். தனியாக யாருக்கும் தெரியாமல் சித்திரம் எழுதப் பார்ப்பேன். சித்திரம் எழுதுவது அவ்வளவு லேசான காரியமா? அவருக்கு என்னமோ, பிரம்மாவே கையில் வந்து எழுதி விடுகிறார்.

இருந்தாலும் 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பார்களே, எழுதி எழுதிப் பார்க்கலாம் என்று எழுதுவேன்.

எனக்குக் கலியாணமாக வேண்டிய பருவம். அவருக்கும் இருபத்தைந்து வயதிருக்கும். சாதாரணக் குடித்தனக்காரராக அவர் இருந்திருந்தால் அவருடன் பேசாமலே நான் பொழுதைப் போக்கி யிருக்கலாம். சித்திரம், சித்திரம் எல்லாம் அழகாக எழுதி விடுகிறார். அதை ரொம்ப நன்றாக இருக்கிறது என்று என் பாராட்டையெல்லாம் அம்பி மூலமாகத்தான் சொல்லி

அனுப்பிக் கொண்டிருந்தேன். ஆன
அது என்னவோ எனக்குப் போதவில்
அவரிடமே அதைச் சொல்ல வேண்
போலிருக்கும். இப்படித்தான் அவரி
பேசும்படி நேரும். நாலரை வருஷம
எங்கள் வீட்டில் இருந்து, அவர் எங்
குடும்ப நபராகக்கூடப் போய் விட்ட
இருந்தாலும், அவருடன் மணிக் கண
காகப் பல்லை இளித்துப் பேசிக்கொண்
நிற்கமாட்டேன். அதிகம் போனால் மூன்
நாலு நிமிஷம்தான். அவரும் கொஞ்
சங்கோசப் பேர்வழி. பெண்களிடம் பே
வது என்றால் அசாத்திய சங்கோ
நான் தலையைக் குனிந்து கொண்டு பே
வேண்டியிருக்க, அவர் தலையைக் குனி
கொண்டு பேசுவார் என்னிடம்.

அன்றைக் கொரு நாள் சனிக்கிழ
என்னைத் தேய்த்துக் கொண்
முறை நான். 'அம்பி, அம்பி!' என
கூப்பிட்டுப் பார்த்தேன். அவன் இருக்
இடமே தெரியவில்லை. ஆனால் அ
அவர் அறைக்குத்தான் போயிருப்ப
என்று எனக்கு நம்பிக்கை. அங்கு அ
ரொம்ப சிரமப்பட்டுக் கூர்மையாகச்
வைத்திருக்கும் பென்சில், பேனா, பிர
முதலியவைகளை வைத்துக் கொ
விஷமம் செய்வானே என்று ரொ
கோபத்தோடு அம்பியைக் கூப்
போனேன். நான் நினைத்தபடியே அ
அங்கிருந்தான். "வாடா அம்பி, அப்
பிடிச்சுக் கூப்பிடறேன், காதிலே
விழல்லையோ?" என்றேன்.

"இதோ பார், அக்கா! இந்த ம
ஒரு நல்ல படம் போட்டுக் கொண்
கார்" என்றான்.

என்றைக்கும் அவர் அறைக்
போகாத நானும் போய் அவர் ப
தில் நின்று கொண்டேன். ஆனால்
மனசில் ஒருவித மகிழ்ச்சியிருந்தது.
குக் காரணம், அவர் படத்தைப் பார்
னலா? அவர் பக்கத்தில் நிற்கிறேனு
பதினாலா என்பது இன்னும் என
தெரியவில்லை. ஆனால் அந்தச் ச
தெருவழியாகக் காலை இளம் வெ
தலையில் தயிர்ப் பானைக் கூடை
நாணிக் கோணிக் கொண்டு வந்தான்
தயிர்க்காரி. அந்தக் காட்சி ரொ
அழகாகவே இருந்தது. நிலைமை

மாளிக்க நல்ல வாய்ப்பாகப் பாயிற்று என்று எண்ணிக் காண்டு, "அந்தத் தயிர்க் ரியைப் பார்த்திர்களா, லையில் இரட்டுமே வைத்து ட்டாற்போல் அகம் ாவத்தோடும், எக்களிப் டனும் அவள் நடந்து ருகிறதை? அதை அப் டியே ஒரு காகிதத்தில் ரைவீர்களா?" என்றேன்.

அவர் ஒரு விரிவும் அவ ளயே உற்றுப் பார்த்தார். ங்கே கிடந்த தாளில் ரண்டொரு கோடுகள் ழுத்துக் கொண்டார். அது ரியாகக்கூட முடியவில்லை. வள் எங்கள் கண்பார் வயிலிருந்து மறைந்து ட்டாள்.

"நான் இதுவரை பெண் ன் படமே எழுதியதில்லை" ன்றார்.

"அதனால் என்ன? இன் றைக்கு எழுதுங்களேன்!"

"வருமோ, வராதோ!"

"நன்றாய்ச் சொன்னீர்கள்! ங்களுக்குக்கூடவா வராமல் பாகும்? கட்டாயம் வரும், ன்றாகவும் வரும்" என்றேன்.

"சரி; நீங்கள் இவ்வளவு சால்லுகிறீர்களே, பார்க் றேன்!" என்றார்.

இரண்டு நாள் கழித்துக் கட்டேன், "எழுதி யிற்று?" என்று.

"இல்லை" என்றார்.


இரண்டு மூன்று நாள் றுபடியும் மறுபடியும் கட்டதற்கு இல்லை இல்லை ன்றேதான் சொல்லிக் காண்டு வந்தார். என்னால் ம்ப முடியவில்லை. "ஏன் ல்லை என்கிறீர்கள்? நீங்கள் கட்டாயம் பாட்டிருப்பீர்கள்" என்றேன்.

இந்தமாதிரி அழுத்தமாகச் சொன்ன டன் அவருக்கு என்ன பண்ணுவது ன்று தெரியவில்லை. தன்னுடைய பாய்யை இன்னும் நீடித்துச் சொல்ல டியாது என்று அவருக்குப் பட்டு விட் து. "போட்டிருக்கிறேன். இருந்தாலும் தை ஒருவரிடமும் காட்ட மாட்டேன்" ன்றார்.

"என்னிடம் கூடவா?" என்று கேட்டு ட்டேன். ஏதோ அவரிடம் சகல உரிமைகளும் கொண்டாட எனக்குத் தான் பாத்தியதை உண்டுபோல!

"உங்களிடம்தான் முதலில் காட்டக் கூடாது. இனிமேல் அந்தப் படத்தைப் பற்றிக் கேட்க வேண்டாம்" என்றார்.

சரி என்று போய் விட்டேன் அன் றைக்கு. இருந்தாலும் அந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் சொல்லி முடியாது. அதிலும் நான் பார்க்கக் கூடாது என்றதினாலேயே ஆவல் அதிக மாகி விட்டது.



விளையாட்டுப் பிள்ளைகள் போலீஸ்காரனைக் கண்டு பயப் படுவது சகஜம். போலீஸ்காரன் விளையாட்டுப் பிள்ளையைக் கண்டு பயப்படும் சந்தர்ப்பமும் உண்டு!

இரண்டு நாள் கழித்து அவரைச் சந்தித்து. "நீங்கள் படத்தைக் காட்டவே மாட்டீர்களா?" என்றேன்.

"இல்லை. காட்டுவதற்கில்லை" என்றார்.

"நீங்கள் அந்தப் படத்தைக் கொடுத்தீர்களானால், நான் போட்டிருக்கிற படம் ஒன்று உங்களுக்குக் காண்பிப்பேன்" என்றேன். இது, சற்று, பெண்கள் இயல்புக்கு அதிகப் பிரசங்கமாகவே போய் விட்டது. இருந்தாலும் நான் என்ன செய்யமுடியும் அந்த நிலையில்?

"நீங்கள் படம் போட்டிருக்கிறீர்களா? ஆச்சரியமாக இருக்கிறதே! அவசியம் அதை நான் பார்க்க வேண்டுமே; கொண்டு வாருங்கள்" என்றார்.

"உங்கள் படத்தைக் கொடுத்தால் தான்" என்றேன்.

"சரி, கொடுக்கிறேன்! உங்கள் படத்தைக் கொண்டு வாருங்கள்" என்றார்.

முதலில் ஏதோ நான் ஜயித்து விட்டதாகப் பெருமிதம் எனக்குண்டானாலும் 'எப்படி அந்தப் படத்தை அவரிடம் கொடுப்பது, அடாடா! என்ன பைத்தியக்காரத்தனம் செய்து விட்டோம்?' என்று ஒரே வெட்கமும் வருத்தமும் பிடுங்கித் தின்றது.

இருந்தாலும் அவருடைய படம் எவ்வளவு அழகாக இருக்கும்!

அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் கொஞ்ச நஞ்சமல்ல. உடனே போய் "என்ன ஆனாலும் ஆகட்டும்! என்ன நினைத்தாலும் நினைக்கட்டும் அவர்!" என்று என் படத்தை எடுத்துக்கொண்டு வந்து விட்டேன்.

ஆனால் அதை என் எதிரில் பார்க்கக் கூடாது, நான் இந்தப் புறம் வந்த பிறகு தான் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் தீர்மானத்துடன் அவர் அறைக்குப் போனேன்.

அவரோ என்னை விட ரொம்பவும் பயந்து காணப்பட்டார்.

படத்தை ஒரு சுருளாகச் சுருட்டி, "இதை உங்கள் அறைக்குப் போய் யாருமில்லாதபோது பிரித்துப் பாருங்கள் .... எவ்வளவோ முயன்று பார்த்தேன். அந்த முகத்தைத் தவிர வேறு எந்த முகத்தையும் இந்தப் பேனா வரைய மாட்டேன் என்கிறது. அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்" என்றார்.

அப்படியே படத்தை வாங்கிக்கொண்டு என் அறைக்கு வந்தேன். கதவைத் தாளிட்டுக் கொண்டேன். பிரித்து பார்த்தேன்.

என்ன ஏமாற்றம்! ஒரே அழுகையு ஆத்திரமுமாக வந்தது.

என் படத்தை அவர் எழுதி யிருப்பா என்று எதிர்பார்த்ததற்கு மாறாக உண்மை யில் அது தயிர்க்காரியின் படமா இருந்தது.

ஏமாற்றத்தோடு போகவில்லை. சொல் முடியாத அவமானமும் பிடுங்கி தின்றது.

ஏனெனில், நான் அவருக்குக் கொடுத் படத்தில் அவர் மாதிரி எழு யிருந்தேன்.

அந்த மனிதர் என்னைப் பற்றி எவ் ளவு கேவலமாக எண்ணிக் கொண்டிரு பார்? என்ன மானக்கேடு?

வந்த ஆத்திரத்தில் தயிர்க்காரி பட தைக் கிழித்துப் போட்டுவிட்டுத் தலை யில் படுத்துக்கொண்டு விம்மி விம் அழுதேன்.

* * *

"அக்கா! அக்கா!" என்று கத்தி கொண்டு என் தம்பி ஓடிவந்தான்.

"பார்! அந்தச் சித்திரக்கார மாம செய்திருக்கும் காரியத்தை!" என் சொல்லிக் கொண்டே குப்புறப்படு திருந்த என் முகத்தைப் பிடித்துத் திரு பினான். என் கண்ணில் கண்ணீரை பார்த்துவிட்டு, "ஏன் அக்கா அழுகிறாய்?" என்று கேட்டான்.

அவன் கேள்வியை நான் கவனிக்க யில்லை. ஏனெனில், அவன் கையிலிருந் படம் என்னுடைய முழு கவனத்தை யும் கவர்ந்து விட்டது. ஆகா! இ என்ன? அவரைப்போல் நான் எழு யிருந்த படந்தான் அது. ஆனால், அதி என் உருவத்தையும் அவர் சேர்த்து போட்டிருந்தார், அவர் பின்பக்கமா நின்று அவருடைய கண்களை நா பொத்துவதுபோல் எழுதியிருந்தது!

நான் இன்னும் அதிகமாக விம்மினே தம்பி ஓடிப்போய் என் தமையனை அழைத்து வந்தான். என்னையும் பட தையும் என் தமையன் மாற்றிப் பார்த் விட்டு, "சீ! அசடே! இதற்காக ஏ அழுகிறாய்? இனி வாழ்நாள் முழு நீங்கள் ஒருவர் கண்ணை ஒருவர் பொத் விளையாடிக் கொண்டிருப்பீர்கள் என்றான்.

அந்தப் படத்தை இன்றைக்கும் பத் மாய்ப் பெட்டியில் பூட்டி வைத் அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கிறே

காலக்ஷேபம்

எடுத்த காரணம்!

சாலையில் லாரிகள் ஓடிப் பள்ளம் கிருந்ததால் இருட்டில் பாதசாரிகள் விழாமல் இருக்கும் பொருட்டு அந்தக் குழிப் பக்கத்தில் "ஜாக்கிரதை, பள்ளம்" து போர்டு எழுதி வைத்திருந்தார்கள். நாள் சாயந்திரம் அந்தப் பக்கம் வந்த ர்கள் இருவர் அங்கே இருந்த போர் காணாமல் "ஏன் இந்த போர்டை து விட்டார்கள்?" என்று பக்கத்தி த ஒரு குடியானவனைக் கேட்டனர்.

யானவன்:—இருட்டில் வருகிறவர்களெல் போர்டு தடுக்கி அந்தக் குழியில் து கொண்டிருந்ததால் இப்போது டை எடுத்து விட்டார்கள். —சந்துரு.

★

நல்ல மதிப்பு!

மானன்:—டேய் முனியா! போக்கிரி உன் மகன் சோமுவை நீ போன மாதம் னக்கு அனுப்புகையில், 'எப்பொழுதும் ள்ளவனாக நடந்து கொள்!' என்று மி அனுப்பினாயே இப்பொழுது அவன் ரம் ஏதாவது தெரியுமா?

யன்:—தெரியுங்க! அவனுக்கு நம் நல்ல மதிப்புதான் எசமான்! யாராவது வின் தலையைக் கண்டால் ஆயிரம் பரிசளிப்பதாகப் போலீஸார் விளம் போட்டிருக்காங்க! —கே. ஆர். சுவாமி.

○

நல்ல யோசனை!

பதாயக் குதிரைப் பந்தயத்திற்கு குப்பனிடம் சுப்பன் "இந்த எழு ந்த பந்தயமே இப்படித்தான். ஒரு ஜயிப்போம், மறுநாள் தோற்றுப் வோம்" என்றான்.

பன்:—அப்படி என்றால் நாம் ஒரு நாள் ஒருநாள் வருவோமே?

—என். எஸ். வி. ராஜா.

★

அவ்வளவு சரமா?

க்கடைக்காரர்:—ஐயோ! என் கடை பின்புறம் தீப்பிடித்துக் கொண்டதே ல்லாம் எரிந்து போயிடுமே, எல்லோ வாருங்கள்! ஓடி வாருங்கள்!!

லில் போகும் வாடிக்கை ஆசாமி:—என் இப்படிக் கத்தறே? உன் விறகு புயல் வினுலும் பத்தி விடாது. பயப்படா ! நான்தான் உன்கடையில் வாடிக் க விறகு வாங்குகிறேனே, எனக்குத் தெரதா?

—ரா. சுப்ரமண்யன்.

வழக்கமான அடையாளம்

லாண்டரிக்காரன்:—என்ன ஐயா, உம் கோட்டு வந்து சேரவில்லை என்கிறீரே! உம் துணிகளில் வழக்கமாக என்ன அடையாளம் செய்திருப்பேன் என்று ஞாபகம் இருக்கிறதா?

மற்றவர்:—இருக்கிறது. காலரைக்கிழித்து, பித்தான்களை உடைத்திருப்பாய்!

—எஸ். ஜி. வெங்கட்ராமன்.

★

அதேமாதிரி

ஒருவர்:—என் கிநேகிதர் உங்களிடம் சாமான் வாங்கி ஐந்து வருஷங்களாகியும் பணம் கொடுக்கவில்லையாமே, வாஸ்தவமா?

கடைக்காரர்:—வாஸ்தவம்தான். தாங்கள் அதைக் கொடுக்க வந்திருக்கிறீர்களா?

ஒருவர்:—இல்லை. அதேமாதிரி எனக்கும் கொடுப்பீர்களா என்று கேட்கவே வந்தேன்!

—கே. டி. ராஜு.

○

அதிசய வஸ்து

ராமு:—எங்கள் அப்பாவுடன் நாங்கள் எல்லாம் தாஜ்மகால் பார்க்கப் போகிறோம்.

சோமு:—எங்கள் அண்ணு கூட தான் பார்த்திருக்கான். அப்படி ஒன்றும் அது அதிசயமாக இல்லை என்றான்.

ராமு:—அப்படியானால் உங்கள் அண்ணு ஒரு அதிசயப் பிறவிதான். அவனைப் பார்த்தாலே போதும்.

—கே. வி. ராமச்சந்திரன்.

★

நல்ல காரணம்!

குப்பு:—என்னை மேஸ்திரி நேற்று வேலையிலிருந்து நீக்கி விட்டான்.

சென்னன்:—ஏன்?

குப்பு:—நான் வேலை செய்யாமலிருந்ததைக் கண்டு எல்லோரும் என்னை மேஸ்திரி என்று எண்ணி விட்டார்களாம்! அதனால்தான்.

—கே. வி. அனந்தன்.

○

கடன் இல்லை!

ஒருவர் (தம் நண்பரிடம்):—எனக்கு இருக்கும் கடனை எல்லாம் தீர்த்து விட்டால் நிம்மதியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.



மற்றவர்:—அதற்கு என்ன யோசனை?

முதலவர்:—யாராவது எனக்கு இருநூறு ரூபாய் கொடுத்தால் நன்றாயிருக்கும்.

—கி. வி. சுப்பிரமணியன்.

கம்பர் தரும் காட்சி

ம.பொ.சி

130. கண்டு விட்டான்

சூர்ப்பனகை இரவெல்லாம் பட்ட கஷ்டத்தைப் பார்த்தோம். கடைசியாகப் பொழுது விடிந்தது. விடிந்ததும் கொஞ்சம் தணிந்தது அந்தக் காதல் நோய். உயிரே அவளுக்கு வந்தது என்று சொல்லலாம். இந்தத் தெளிவு அவளுக்குப் புதிய ஒரு ஊக்கத்தையே கொடுக்கிறது. துணிவும் உண்டாகிறது. "அந்த அழகுள்ள பெண் ஒருத்தி இருக்கும்வரை நம்மைத் தீண்டப் போவதில்லை ராமன். இருக்கட்டும். அதற்கு ஒரு வழி பார்க்கலாம்" என்பதாக எண்ணுகிறாள்.

சந்தம்

தான தன்ன
தானன தானன
தா ன

விடியல் காண்டலின்
ஆண்டுதன் உயிர்கண்ட
வெய் யாள்,

'படியி லான்மருங்(கு)
உள்ளள(வு) எனை அவன்
பா ரான்:

கடிதின் ஓடிஎன்
எடுத்(து) அவள்க் கரந்திவண்,
கா தல்

வடிவி னொடுடன்
வாழ்வதே வாழ்(வு)' என
மதி யா.

[விடியல் காண்டலின் ஆண்டு தன் உயிர் கண்ட வெய்யாள்: சூரிய உதயத்தைக் கண்ட மாத்திரத்தில் அப்போதுதான் தன் உயிரை (போன உயிரை) மறுபடியும் கண்ட கொடிய அரக்கியானவள் — சொல்லுகிறாள்: படியிலான் மருங்கு உள்ளளவும்: யாதொரு பழுது மில்லாத அந்தப்பெண் தன் பக்கத்தில் உள்ளளவும்; எனை அவன் பாரான்: என்னை அவன் எதிட்டுப் பார்க்க மாட்டான்; ஆகையால், கடிதின் ஓடி என் எடுத்து அவள் கரந்து இவண்: இப்பொழுதே நான் ஓடிப் போய் அவளை எடுத்து இங்கே ஒரு இடத்தில் மறைத்து விட்டு; காதல் வடிவினொடுடன் வாழ்வதே வாழ்வு: காதலே ஒரு உருவாய் அமைந்தது போலுள்ள ராமனிடம் குளாவி வாழ்வதே வாழ்வு; என மதியா: என்று மதித்தவளாய்.]

சீதையைத் தூக்கிக்கொண்டு போவதற்காக ஆசிரமத்துக்குச் சூர்ப்பனகை போகிறாள். அங்கே ஒரு தடாகத்தின் ஓரத்தில் இருந்து கண்ணை மூடியவாறு சந்தியாவந்தனம் செய்து கொண்டிருக்கிறான் ராமன். சீதை பர்ணசாலையில் இருக்கிறாள்.

வந்து நோக்கினள்,
வள்ளல்போய் ஒருமணித்
தடத் துச்

சந்தி நோக்கினன்
இருந்தது கண்டனள்;
தம் பி

இந்து நோக்கிய
நுதலியைக் காத்(து) அயல்
இருந் ட

கந்தம் நோக்கிய
சோலையில் இருந்தது
கா ணுள்.

[வந்து நோக்கினள்: சூர்ப்பனகை வ... பார்க்கிறாள்: வள்ளல் போய் ஒரு ...



"அவனுக்கு என்னப்பா, பணக்கா... வீட்டுப் பையன்! பத்தாயிரம் ரூபா... நோட்டிலேயே கப்பல் பண்... விடுகிறான்."

நடந்து: ராமன் பக்கத்திலிருந்த தடாகத்தின் கரையில்; சந்தி நோக்கினன் இருந்தது கண்டனன்: காலை சந்தியாவந்தனத்தில் ஈடுபட்டு தியான நிலையிலிருப்பதைக் கண்டான். தம்பி லக்ஷ்மணனுனவன்: இந்து நோக்கிய நுதலியைக் காத்து: பிறைச் சந்திரன் போன்ற நெற்றியவளான சீதையைக் காத்த வண்ணமாய்; அயல் இருண்ட கந்தம் நோக்கிய சோலையில் இருந்தது காணுன்: அந்த இடத்தை ஒட்டிச் செறிந்த நிழலால் இருள் கொண்டதும் புஷ்பங்களால் மணம் கமழ்வதுமான சோலையில் உட்கார்ந்திருந்தான் என்பதைத் தெரிந்து கொள்ளவில்லை அவள்; கந்தம் நோக்கிய சோலை: வாசனையானது தனக்கு வாய்ந்த இடம் என்று பார்த்துத் தங்கிய சோலை. அதாவது சதா வாசனை கமழும் சோலை.

குறிப்பு:—சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்த ராமனை நன்ருய்ப் பார்த்துக் கொண்டாள். ஆனுல், இருண்ட சோலையில் உட்கார்ந்திருந்த தம்பியைப் பார்க்கவில்லை. இந்த முரண் வெகு ரஸமாய்ச் செய்யுளில் அமைந்திருக்கிறது!]

சீதை தனியாகவே இருக்கிருள் என்று நினைத்தாள்.

"நான் எண்ணியது கைகூடி விட்டது. தாமதித்துக் கொண்டு யோசனை பண்ண வேண்டிய காரியம் ஒன்றுமில்லை" என்று எண்ணிச் சீதையை நோக்கி ஓடினுள் சூர்ப்பனகை.

'தனி இ ருந்தனள்,
சமைந்த(து)என் சிந்தனை,
தாழ் வுற்(று)
இனி இ ருந்தெனக்(கு)
என் றுவ(து) இல்'என
என் றுந்,
துனி இ ருந்தவல்
மனத்தினள் தோகையைத்
தொடர்ந் தாள்;—
கனி இ ரும்பொழில்க்
காத்தயல் இருந்தவன்
கண் டான்.

[சமைந்தது என் சிந்தனை: கைகூடி விட்டது நான் எண்ணியது; தாழ்வுற்று: விளுக்த் தாமசம் செய்து: இனி இருந்து எனக்கு என்றுவது இல்: இனிமேல் சும்மா யிருந்து கொண்டு யோசனை செய்ய வேண்டிய காரியம் யாதுமில்லை; என என்று: என்று எண்ணினவளாய்; துனியிருந்த வல்மனத்தினள்: ஆங்காரம் குடிகொண்டிருந்த கொடிய மனத்தினளாகிய சூர்ப்பனகை: தோகையைத் தொடர்ந்தாள்: சீதை மேல் பாய்ந்தாள்; தோகை: மயில் போன்றவள்; கனியிரும் பொழில் காத்து அயல் இருந்தவன் கண்டான்: இருள் செறிந்த சோலையில் காத்துக் கொண்டிருந்த லக்ஷ்மணன் பார்த்துக் கொண்டான்—சீதைமேல் பாய்ந்ததை.]

சோலையில் லக்ஷ்மணன் காத்துக் கொண்டிருந்த விஷயம் சூர்ப்பனகைக்குத் தெரியவில்லை. சீதையை லகுவில் தூக்கிக்கொண்டு போய்விடலாம் என்று அவள் மேல் பாய்ந்தாள். அப்படிப் பாய்ந்ததைக் கண்டு கொண்டான் லக்ஷ்மணன். இனி நடக்கப் போவதை அடுத்த இதழில் பார்க்கலாம்.

அவருடைய கவலை

ஹேமேந்திர சன்யால் என்ற புகழ் பெற்ற ஓவியர், ஒரு நாள் தம் நண்பருடன் சினிமாவுக்குப் போய் விட்டுத் திரும்பி வந்தபோது, தம்முடைய அறைக் கதவு திறந்திருப்பதையும் பல சாமான்கள் களவு போயிருப்பதையும் கண்டார்.

அறை முழுவதும் ஒரே அலங்கோலமாயிருந்தது. சாமான்கள் சிதறிக் கிடந்தன. பல கடிதாசிகள் மூலைக் கொன்றுகக் காற்றில் பறந்து கொண்டிருந்தன.

நண்பர் ஓவியரைப் பார்த்து, "என்ன? முக்கியமான பொருள் ஏதாவது களவு போயிருக்கிறதா?" என்று கேட்டார்.

"இல்லை. கொஞ்சம் துணி மணிகளையும் சில்லறைச் சாமான்களையுமே எடுத்துக் கொண்டு போயிருக்கிருர்கள்" என்ருர் சன்யால்.

"அப்படியானுல் ஏன் கவலைப்படுகிருய்?"

"அதுதான் எனக்குக் கவலையாயிருக்கிறது. அந்த முட்டாள்கள் என் படங்களைத் திரும்பிக்கூடப் பார்க்கவில்லையே!" என்ருர் சன்யால்.

வான சஞ்சாரம்

4ஆ. இரவு திருச்சியி லிருந்து கேட்ட திருவிழிமிழலை சகோதரர்களின் நாதஸ்வர கானம் கர்ணாமிருதமா யிருந்த தென்று சொல்லத் தேவையில்லை. மந்தாரி ஆலாபனை சுருக்கமாயினும் தெளிவாயிருந்தது. பல்லவி ராகமான சங்கராபரணமும் பல்லவி ராக மாலிகையும் வனப்பா யிருந்தன. ஹம்ஸா நந்தி ராகமும் அதன் உருப்படியும் வெகு குளிர்ச்சியா யிருந்தன.

அன்று அதே நிலையத்தில் மாலையில் பாடிய சிதம்பரம் கே. கோமதியின் கச்சேரி இரண்டு பாகமா யிருந்த போதிலும் உயர்ந்த ரகத் தைச் சேர்ந்தது. ரேடியோவில் கனிப்பும் ரஞ்சகமும் கொண்ட குரலாகவே கேட்டது. சில இடங்களில் ஒரே பிர்க்காக் களஞ்சியமா யிருந்த போதிலும் மற்ற லயவு குழைவு நாஸுக்குகளும் போதியவாறு தென்பட்டன. பைரவி வெகு சிறப்பா யிருந்தது. ஹம்ஸத் வனி, வஸந்தா, ஆபோகி, யதுகுலகாம் போதி ராகங்களும் வனப்பா யிருந்தன.

அன்று சென்னையில் நீலம்மா கடம்பி இனிய குரலில் வீணையுடன் இழைந்து, காபி, சங்கராபரணம் ராகங்களையும் 'ஸ்வரகு' கிருதியில் நிரவல் ஸ்வரங்களையும் வனப் பாய் வழங்கினார்.

5ஆ. சென்னையில் கேட்ட பி. வி. ராமனின் கானம் தரமா யிருந்தது. கனிப்புக்கொண்ட பாந்த சாரீரம் போலும். மோஹனம், ஆபோகி, சங்கராபரண ராகங்கள் நற் சொரூபங்களா யிருந்தன. 'அலையிங்க லிபோ' கிருதியில் நிரவல் ஸ்வரங்கள் சுகமா யிருந்தன.

6ஆ. சென்னையில் எஸ். ரத்னம்மா, மதுர மான குரலில், குளிர்ந்த கார்வைகளுடன், ஸாவேரி, சங்கராபரணம், மோஹனம் ராகங் களை வழங்கினார். பாடும் வழியைச் சிறிது ஒழுங்குபடுத்திக் கொள்ள இடமுண்டு.

8ஆ. சென்னையிலிருந்து கேட்ட எஸ். சோம சுந்தரத்தின் கச்சேரி வழக்கமான பிர்க்காப் பொழிவுடன் ரஸமா யிருந்தது. சந்திர ஜ்யோதி, சங்கராபரணம், இறுதி ராகமாலிகை இவை அழகாயும் தெளிவாயு மிருந்தன. 'சலி வதனு' கிருதியில் நிரவல் ஸ்வரங்கள் ஜோர்.

• • •

9ஆ. திருச்சியில் எஸ். எஸ். மணி, சென் னையில் ஆர். கே. ஸ்ரீகண்டன் இவர்களின் கானங்கள் குறிப்பிடத் தக்கவை. முன்னவர், நய சாரீரத்தில், தன்யாசி, சங்கராபரணம், மோஹனம், ஸாவேரி ராகங்களைத் திறம்பட வழங்கினார். பின்னவரின் பிலஹரி, தோடி, கல்யாணி ராகங்கள் நல்வடிவங்களா யிருந்தன.

10ஆ. திருச்சியி லிருந்து கேட்ட சீர்காழி சதாசிவம்பிள்ளையின் கச்சேரியும் தரமா யிருந்தது. எல்லா உருப்படிகளுக்கும் அவை களின் ராகங்களை ஆலாபனை செய்தார். கோகிலப்ரியா கவனத்தை யிழுத்தது.

12ஆ. திருச்சியில் வயலின் கச்சேரி செய்த திருப்பாப்புலியூர் வி. ராஜமய்யர் எளிதில் முன்னுக்கு வரக்கூடியவர் என்பது அவர் வாசிப்பிலிருந்து தெரிய வந்திருக்கும். பருதாசி, தன்யாசி, சுரடி ராகங்களும் அவை களின் உருப்படிகளும் கச்சிதமாயும் அழகாயு மிருந்தன.

அன்று சென்னையில் எஸ். ஆர். சுந்தர ராகவன், வி. ஆர். சந்திரா இவர்களின் கானங்களும் கவனத்தை யிழுத்தன. முதலவர் நடுத்தர சாரீரத்தில், நல்வழியாய் வழங்கிய ரீதிகௌளை, கரஹரப்ரியா, ஷண்முகப்ரியா, வஸந்த பைரவி ராகங்கள் வனப்பா யிருந்தன. வி. ஆர். சந்திராவின் இனிய குரலிலிருந்து வந்த ஹம்ஸத்வனி, தன்யாசி ராகங்களும் உருப்படிகளும் நேர்த்தியா யிருந்தன.

12ஆ. சென்னையிலிருந்து கேட்ட டி. ஆர். மகாலிங்கத்தின் வேணுகானம் வழக்கம்போல் பிரமாதமாகவே யிருந்தது. வாசிக்கும் நேரம் குறுகியும் நடுவே ஓய்வெடுத்துக் கொள்ளும் நேரம் நீண்டதாயு மிருந்தன. கீர்வாணி, சுருதி சுத்தமான கார்வைகள், நிதா னம், லயவு குழைவுகள் இவை கொண்டு வனப்பா யிருந்தது. அதில் வாசித்த உருப்படி மிகப் பழமையான 'வரமுலொஸகி'. கல்யாணி ராகமும், பல்லவி ராகமாலிகைகளும் வெகு சுருக்கம். 'நின்னுவினா நாமதேந்து' வில் விழுந்த சங்கதிகளும், பல்லவி ராகத்தில் தானமும், பல நாதவகைகளைக் கிளப்பும் விசித்திர வேலைப்பாடுகளுடன் இலங்கின.

13ஆ. சென்னையில், பிற்பகலில் ஒரு மணி நேரம் நடந்த எஸ். ராஜத்தின் கச்சேரியைக் கேட்ட பிறகு அதை முதல்தர வகையில் சேர்க்காமலிருக்க முடியாது. கனிவாய் இழையும் குரலில், சிறந்த கற்பனையுடன் நிதானமாயும், படிப்படியாயும் மூன்று ஸ்தாயி களிலும் விஸ்தாரமாய் வழங்கிய தோடி வெகு நேர்த்தியா யிருந்தது. அதன் கிருதி 'நீ தய ராவலே'வில் நிரவல் ஸ்வரங்களை அமோக மாய்ப் பொழிந்தார். ஆரம்ப ராகமான வாசஸ் பதியும், பல்லவி ராகமாம் பந்துவராளியும், வனப்பா யிருந்தன. இவரிடமுள்ள அதி நாஸுக்குடன் ஸாஹித்யத்தையும் இன்னும் சற்றுத் தெளிவாய் வழங்கலாம்.

• • •

ஜனவரி 14ஆ. பொங்கலன்று காலை திருச்சி யில் நாகப்பட்டணம் சிவசுப்ரமணியம் சகோ தரர்கள், குளிர்ந்த நாதத்துடன் நாதஸ்வர வாத்தியத்தில் வாசித்த 'மனஸா' என்ற மலய மாருத உருப்படியுடன் தை மாதம் மங்களகரமாய்ப் பிறந்தது. விஸ்தாரமாய் ஆலாபனை செய்த தோடியும் அதில் பல்லவி ராகமாலிகையும் வனப்பா யிருந்தன. அசா வேரியும் வெகு சுகமா யிருந்தது.

அன்றிரவு அதே நிலையத்தில் மதுரை மணி அய்யர் செய்த முழு நேரக் கச்சேரி சென்ற வார நிகழ்ச்சிகளுக் கெல்லாம் முதன்மையா யிருந்ததென்று சொல்லத் தேவையில்லை. ஆரம்ப ஜகன்மோஹினியி லிருந்து இறுதி ஹம்ஸாநந்திவரை கச்சேரி வெகு ஜோர். சாருகேசியின் விரிவான ஆலாபனையும் அதில் தானம், பல்லவி, ராகமாலிகையும் மனங் கவர்ந்தன. பைரவியை அடுத்தாற்போல் சொல்லலாம். 'சேபிஸ்து', 'யாரோ இவர் யாரோ' உருப்படிகளில் நிரவல் ஸ்வரங்கள் வழக்கம்போல் களை நிறைந்திலங்கின.





லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!


இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிறதென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.



ப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

LEVER BROTHERS (INDIA) LIMITED



சரும சுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

ரெக்ஸோனாவினால் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்ய முடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக் கொள்ளவேண்டும்; இல்லையேல், அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனா வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிரிமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனாவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்யத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச் சேர்த்து நன்மையைக் கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின் மீது படிந்துள்ள அழுக்கையும் வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்தி செய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்றாய்ப் பொலிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனாவையே உபயோகியுங்கள்.



குழந்தைகளுக்கு ரெக்ஸோனா: ரெக்ஸோனாவின் நுரை மிருதுவாயிருப்பதால் சிறு குழந்தையின் மெல்லிய சருமத்திற்குச் சிறந்தது. டாக்டர்கள் அதை சிபாரிசு செய்கிறார்கள். குழந்தையின் சருமத்தை எரிச்சல், அரிப்பு முதலியவைகளிலிருந்து ரெக்ஸோனாவிலுள்ள கேடில் காப்பாற்ற உதவுகிறது.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமியை யொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்யத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும் குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.



ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரங்குகள், படைகள், மச்சமறுக்கள் முதலிய எல்லாச் சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.


R.P. 27-23 TM

REXONA PROPRIETARY LIMITED



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



KALKI ஜனவரி 27, 1946 4 அணா


ஆடவர்கள் விரும்பு
வது அழகுள்ள மங்கை
யர் மங்கையரின் இயற்
கைப் பொலிவைப் பன்
மடங்காகப் பெருக்குவது
ஆபரணங்கள். அழகுக்கு
அழகு செய்யும் ஆபர
ணங்களை புதுப்புது ரகங்
களில் செய்வதில் அரை
நூற்றுண்டுக்கு மேலாக
அனுபவம் பெற்றிருக்
கிறோம். தங்கள் தேவை
களை தயவுசெய்து தெரிவி
யுங்கள்.
வீகம்ஸ்
..சைனா பஜார் மதராஸ்..
KITTU'S

சைபால் (Regd) CIBOL

முகப்பரு, சேத்துப்புண், சிரங்கு, வேனல் கட்டி
தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக்
கை கண்ட மருந்து

•

அயோடிசால் (Regd) IODISAL

ரத்தத்தைச் சுத்தி செய்து
திரேகத்திற்கு ஆரோக்கியத்தைக்
கொடுக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2—0—0

•

பேபி - கிரைப் BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள் :

தீ சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் ஸிடி, நெல்லூர், ஸீடெட், விசாகப்பட்டணம்
ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி., மதராஸ்

குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்கும்
நிஜாம் சமஸ்தானத்திற்கும் ஏஜண்டுகள் :

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா

மைசூர் சமஸ்தானத்திற்கு ஏஜண்டுகள் :

சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி.

Regd. No. M 4392

